குருபாதம்

# ஞானசம்பந்தம்


தருமையாதினத் திங்கள் இதழ்

மலர் 27 ] கீலக ஆண்டு வைகாசித் திங்கள் 10—6—68 [ இத

தருமையாதீன முதற்குரவர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

குருபூஜை விழாவில்



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் கொலுவீற்றிருந்து

அருட்காட்சி வழங்குதல்

தருமையாதீனக் குருமுதல்வர்



ஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

# "ஞானசம்பந்தம்"

## தருமையாதீனத் திங்கள் இதழ்


மலர் 27 | 10-6-68 | இதழ் 7


## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | அருளுரு வழிபாடு | ... 277 |
| 2 | அறநெறியும் அருள்நெறியும் | ... 282 |
| 3 | சித்தாந்த வினாவிடை | ... 287 |
| 4 | "கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணி யான்" | ... 291 |
| 5 | திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு | ... 294 |
| 6 | கலைவளர் மாளிகை | ... 300 |
| 7 | வாதவூரரும் வடலூரரும் | 304 |
| 8 | திருப்பனந்தாள் தலச்சிறப்பு | ... 310 |
| 9 | தமிழ்நாடு தெய்விகப் பேரவை | ... 313 |
| 10 | செய்திகள் | ... 315 |
| 11 | இலவச சித்த வைத்தியசாலை | ... 318 |
| 12 | எதிர்காலம் | ... 321 |
| 13 | Extract from the Visitor's Book | 281, 324 |


உ

குருபாதம்

## ஸ்ரீ குருஞானசம்பந்தர்

## அருள்வாக்கு

தத்துவத்தை விட்டருளிற்
றுன்கலந்து தன்னிழப்பின்
மெத்துஞ் சுகத்தின்
மிகஅழுந்திச் — சுத்தமாய்
ஒன்றாகி நின்ற
உணர்வும் ஒழிந்தக்கால்
அன்றே சிவபோக
மாம். (65)


ஆசிரியர் :

வித்துவான்
சோமசுந்தரத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் ;

வித்துவான்
சி. அருணைவடிவேல் முதலியார்

உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 27 ] கீலக - வைகாசி - 10—6—68 [ இதழ் 7

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிர் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ;
கொன்றையம் முடியினுய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே. (சம்பந்தர்)

திருச்சிற்றம்பலம்

## அருளுரு வழிபாடு

மக்கள் அடைதற்பாலனவாகிய 'அறம், பொருள், இன்பம், வீடு' என்னும் பயன் நான்கனுள் இறுதியில் உள்ள வீடு ஒன்றே முடிந்த பயனாகும். அதனால் புருடார்த்தங்கள் நான்கனுள் வீடுபேறு ஒன்றையே, 'பரம புருடார்த்தம்' என்பர் பெரியோர்.

இவ்வீடுபேற்றிற்கு உரிய சாதனங்களைப் பற்பல சமயங்கள் பற்பல வகையாகக் கூறும். சாதனத்தால் அடையப்படும் பயன், 'சாத்தியம்' எனப்படும். சாத்தியமாகிய வீடுபேறுவது யாது என்று ஆராயும் பொழுது, அதனைச் சமயங்கள் பலவும்

பல்வேறு வகையாக உணர்வதால், அதனை அடைதற்கு அவை கூறும் சாதனங்ளும் பல்வேறு வகையாகக் காணப்படுகின்றன. சைவ சமயம் கூறும் சாத்தியமாகிய வீடுபேறு, இறைவன் திருவடிப்பேறுகும். அதனால், அச் சாத்தியத்தின் பொருட்டு அது கூறும் சாதனம் இறைவழிபாடேயாம்.

இறைவன் உருவம் அற்ற ஒருபொருள்; எல்லையற்றுப் பரந்து கிடக்கின்ற மண்ணும், விண்ணுமாகிய அனைத்துலகங் களுக்கும் அப்பால் உள்ள பொருள். அவனை உருவப் பொருளையே அறியும் ஆற்றலுடையனவாய, உலகத்துள் அகப் பட்டு நிற்கும் உயிர்கள் கண்டு வழிபடுவது எவ்வாறு? அஃது இயலாததொன்றே. அவ்வியலாமையை அறிந்த இறைவன், உயிர்கள் தன்னைப் பல்வேறு வடிவில் கண்டு வழிபட்டு உய்தல் வேண்டும் என்னும் பெருங்கருணையால், 'அருவம், உருவம், அருவுருவம்' என்னும் முக்கூற்றினுள் ஒன்றினும் படாது, தன்னின் வேறின்றி நிற்கும் தனது சத்தியால் தன் விருப்பப்படி அளவிறந்த திருமேனிகளைக் கொண்டும், அத்திருமேனி களோடே உலகப் பொருள்களில் நின்றும் உயிர்கள் தம் மன மொழி மெய்களாற் செய்யும் வழிபாடுகளை ஏற்றருள்கின்றான்.

இறைவன் தனது சத்தியாற் கொள்ளும் திருமேனிகள் பெருந்தவம் உடையார்க்கே ஒரோவொருகால் காட்சிப்படுவன வன்றி, எல்லார்க்கும் எஞ்ஞான்றும் காட்சிப்படுவன அல்ல. எனவே, அவன் தனது சத்தித் திருமேனியோடு நிற்கும் நிலைக் களங்களாகிய உலகப் பொருள்களே யாவர்க்கும், எஞ்ஞான் றும் காட்சிப்பட்டு நின்று வழி படப்படுவனவாம்; அங்ஙனம் வழிபடப்படும் காட்சித் திருமேனிகள், 'குரு, இலிங்கம், சங்கமம்' என மூன்று வகைப்படும்.

அவற்றுள் குருமூர்த்தமாவது, (திருமேனி எனினும், மூர்த்தம் எனினும் ஒக்கும்.) எந்த அளவேனும் பதி, பசு, பாசங்களாகிய முப்பொருள்களின் இயல்பை உணர்த்தி, பசு வாகிய உயிருக்குப் பாசம் பகைப் பொருள் என்பதையும், பதியாகிய இறைவனே உறவு என்பதையும் தெளிவித்துப் பாசத்தில் உவர்ப்பும், பதியின்கண் அன்பும் உண்டாகச்செய்து பதியை வழிபடும் முறையையும் கற்பிக்கும் ஆசிரியரது திரு மேனி, உண்மையில் அவ்வாசிரியரது ஆன்ம சைதன்னியமே

இறைவனுக்குத் திருமேனியாய் நிற்பது. எனினும், ஆசிரியரது ஆன்ம சைதன்னியத்தின்வழி நிற்கும் அவரது திருமேனியும் சார்பு வகையால் இறைவன் திருமேனியேயாய்நிற்கும்.

இனி, 'இலிங்க மூர்த்தம்' என்பது, இறைவன் ஒரோஒரு காரணம் பற்றி அவ்வப்பொழுது கொண்ட சத்தித் திருமேனி களின் வடிவமாகச் செய்யப்பட்டுத் திருக்கோயில்களில் எழுந் தருள்விக்கப்பெற்ற திருவுருவங்களாம். இத் திருவுருவங்களில் இறைவனை வழிபடுங்கால், மந்திரங்களாலே வழிபடவேண்டு மாகலின், அம் மந்திரங்களே அவ்விடத்தில் அவனுக்கு உண் மைத் திருமேனிகளாம்.

மூன்றாவதாகச் சொல்லப்பட்ட சங்கம மூர்த்தமாவது, இறைவனது கோலத்தைப் புனைந்து வரும் அடியார்களது திருமேனிகளாம். இவ்விடத்தில் வழிபடப்படுவது வேடமே யன்றி வெற்றுடம்பன்று. அதனால், இங்கு வேடமே இறைவ னுக்கு உண்மைத் திருமேனி. அவ்வேடத்திற்கு இன்றியமை யாத பற்றுக்கோடாய் இருத்தல் பற்றியே அடியவரது உடம்பும் இறைவன் திருமேனியாகின்றது. எனவே, இறைவன் வேடத் தைப் புனைந்தோர் குலம், குணம், செயல் என்பவற்றால் இழிந் தோராயினும் சங்கமரேயாய் வழிபடப்படுவர் என்பதும், அவ் வேடத்தைப் புனையாதார் குலம் முதலியவற்றால் உயர்ந்தோ ராயினும் சங்கமர் ஆகார் என்பதும் பெறப்படும். பூசு நீறு போல் உள்ளும் புனிதராய் இல்லாது, மெய்யெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக் கட்டி, மைபொதி விளக்கே என்ன மனத்தினுட் கறுப்பு வைத்திருப்போர் அகத்தால் அடியவரல்லா ராயினும், சங்கம வழிபாடு செய்வோர்க்குப் புறத்தோற்றம் ஒன்றுமே நிரம்புவதாம். அதனால், அவர் அவரது அகநிலைபற்றி ஆராயற்பாலரல்லர். மற்று அத்தகைய பொய்வேடத்தாரை இறைவனது அதிகார சத்தியைப்பெற்று உலகில், அல்லது கடிந்து நல்லது நிறுத்தும் அரசர் ஒருதலையாக ஒறுத்து நன்னெறி நிறுத்தற்பாலர். இவ்வாறு செய்தல் அரசர்க்கு அறம் என்ப தையும், அங்ஙனம் செய்யாத அரசன் தனது அறத்தின் வழுவினவனாய்க் கேடெய்துவான் என்பதையும் திருமந்திரம் 'இராச தோடம்' என்னும் பகுதியில் வலியுறுத்துக் கூறுதல் காணலாம். மேலும் பொய்வேடம் புனைந்தோர் இறைவனால் மறுமையில் ஒறுக்கப்படுவர் என்பதும் அவ்விடத்துக் கூறப்

படுகின்றது. பொய்வேடம் புனைந்து, மெய்யன்பர் செய்யும் வழிபாட்டினைப் பெறுவோர் அதற்குரிய தண்டத்தைப்பெறுதல் அவரளவில் நிற்பது. அது பற்றிச் சங்கம வழிபாடு செய்வோர் ஆராயவேண்டுவதில்லை. எனவே, வீடுபேற்றை விரும்புவோர்க்குக் குரு லிங்க சங்கம வழிபாடே சாதனமாவனவாம். இதனை,

" அப்பாஇம் முத்திக் கழியாத சாதனந்தான்
செப்பாய் அருளாலே செப்பக்கேள் — ஒப்பில்
குருலிங்க வேடம்எனக் கூறில்இவை கண்டார்
கருவொன்றி நில்லார்கள் காண் "

என்றும்,

" கற்று மனம்போல் கசிந்துகசிந் தேஉருகி
உற்றுசான் லிங்கம் உயர்வேடம் — பற்றுக
முத்தித் தலைவர் முழுமலத்தை மோசிக்கும்
பத்திதனில் நின்றிடுவர் பார் "

என்றும் வரும் உண்மை விளக்க வெண்பாவினுல் உணரலாம்.

குரு லிங்க சங்கமங்களாகிய மூன்றினுள்ளும் முன்நிற்பது குருவடிவமே. மூன்றும் அருளுருவமேயாயினும் குருவடிவமே சிறப்பாக 'அருளுருவம்' எனப்படுகின்றது. இதனைத் திருவருட்பயனில் உள்ள 'அருளுருநிலை' என்பதனுல் அறியலாம். குரு வடிவம் ஒன்றே இங்ஙனம் கூறப்படுதற்குக் காரணம், அஃதொன்றே நம்மனோர்போல நம்முடனுய் நின்று, நூலாலும், அறிவுரையாலும், பிறவற்றுலும் நமக்கு அருள்புரிதலேயாம். மேலும் இறைவனது ஐந்தொழில்களுள் முடிவாகச் சிறந்து நிற்கின்ற அருளல் தொழிலைச் செய்வது குருவடிவமே. அதனுல், 'அருளுரு' என்பது வேற்றுமைத் தொகையாலன்றி, வினைத் தொகையாலும் சிறந்து நிற்பது குருவடிவிற்கே மிகப் பொருந்துவதாம். இதனுல், குருவருள் கிடைக்கப்பெற்றேர்க்குக் குரு வழிபாடு ஒன்றே எல்லா வகை வழிபாடுகளாயும் அமையும் என்பதைச் சிவஞான சித்திநூல்,

" பரப்பிரமம் இவனென்றும், பரசிவன்தான் என்றும்,
பரஞானம் இவனென்றும், பராபரன்தான் என்றும்
அரன்தருஞ்சீர் நிலையெல்லாம் இவனே என்றும்
அருட்குருவை வழிபட "

எனக் கூறுகின்றது.

குருவழிபாடாகிய இவ்வருளுரு வழிபாடு பல இடங்களில் நிகழ்வதாயினும், சைவ ஆதீனங்களில் இது மிகச் சிறப்புற்று விளங்குவதாம். அண்மையில் எங்கள் தருமையாதீன ஆதி பரமாசாரியர் ஸ்ரீ குருஞான சம்பந்தர் அருளுருவ வழிபாடு மிகச் சிறப்பாக நடைபெற்றுப் பலர்க்கும் பலவகைப் பயன்களை அருளினமை அன்பர்கள் உள்ளத்தில் அகலாது நிற்பதாம். சைவ சமய தோத்திர சாத்திரங்களே யன்றித் தமிழ்ப் பொது மறையாம் திருக்குறள், தமிழ் இலக்கியம், தமிழ் மொழி, தமிழையும் சைவத்தையும் வளர்த்த மன்னர்கள் வரலாறு முதலியன பற்றிய கருத்தரங்கு, கவியரங்கு, பட்டிமன்றம் முதலிய நிகழ்ச்சிகள் புதிய முறையில் அமைந்து பலர்க்குப் பயன்பட்டன. இந்நிகழ்ச்சிகள் சிலவற்றைத் திருச்சி வானொலி நிலையத்தார் ஒலிபரப்பினமை குறிப்பிடத்தக்கது. இன்னோ ரன்ன நிகழ்ச்சிகள் பலவும் அருளுருவ வழிபாட்டில் அனைவரை யும் ஈடுபடச் செய்வனவாகும். அவற்றைக் கண்டும், கேட்டும் களித்த அன்பர்கள் பலரும் என்றும் அருளுருவ வழிபாட்டை மேற்கொண்டு, ஆசான்மூர்த்தியின் அருள்பெற்று உய்வார் களாக.

---

## EXTRACT FROM THE VISITORS' BOOK

### Dharmapuram Adhinam

### Sri Kambahareswaraswamy Devasthanam, Tirubuvanam.

திருபுவனத் திருத்தலத்தை இன்று தரிசிக்கும் பேறு எனக் கும் என் மனைவிக்கும் கிடைத்தது. தருமை ஆதீனக்கோயில் களுக்குத் தனிப்பட உள்ள துப்புரவும், நிருவாக அமைப்பும், நிருவாகஸ்தர்கள் நடைமுறைகளை ஆர்வத்தோடு கவனிக்கும் தன்மையும், உள்ளத்தைக் கவர்ந்தன. சரபமூர்த்தியின் தரிசனம் ஒரு தனிப்பரவசத்தை அளித்தது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்களைப்பார்த்து இந்த ஏற்பாடுகளைக் கவனிக்கும் நற்பேறு பெற்ற ஊழியர்களுக்கு என் பாராட்டுதல்கள். குருமணி அவர் களுக்கும் என் பணிவார்ந்த வணக்கம்,

(ஒ-ம்) மா. ப. பெரியசாமி தூரன்,
தமிழ்க்கலைக்களஞ்சியம், சென்னைப்பல்கலைக்கழகம்,
(தமிழ்வளர்ச்சிக் கழகம்)
சென்னை - 5.

14—5—68.

உ

குருபாதம்

குருவருள்

# அறநெறியும் அருள்நெறியும்

## "மலர்மிசை ஏகினுன்"

இறைவன் முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளாயும். பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனாயும் இருப்பவன் என்பதை விளக்க அவனை 'ஆதிபகவன்' என்றும், யாதொன்றனையும் பிறர் அறிவிக்க வேண்டாது எல்லாவற்றையும் தானே அறிந்தும், அறிவித்தும் நிற்பவனுதலை விளக்க 'வாலறிவன்' என்றும் குறித்த திருவள்ளுவர், பின்னும் அவனை "மலர்மிசை ஏகினுன்" என்னும் பெயரால் குறிப்பிடுகின்றுர். இதன் பொருள் யாது?

பௌத்தரும். சமணரும் தங்கள் சமயக் கடவுளது திருவடிகள் நிலத்தில் படுவதில்லை என்றும், அவை எப்பொழுதும் தெய்வத்தாமரை மலரின்மேல் நிற்பன என்றும், அத்தாமரை அவர் திருவடி பெயர்த்து வைக்கும் இடந்தோறும் தாம் பெயர்ந்து சென்று அவற்றைத் தாங்கிச் செல்லும் என்றும், அதனுல், அவர்கட்குப் "பூமேல் நடந்தான்", 'கமலஊர்தி" என்னும் பெயர்கள் உளவாயின என்றும், 'பூமேல் நடந்தான்' என்னும் பெயரையே திருவள்ளுவர், 'மலர்மிசை ஏகினுன்' எனக் கூறினுர் என்றும் கூறுவர்.

இது, மேற்போக்காகப் பார்க்கும்பொழுது உண்மை என்றே எண்ணத் தோன்றும். ஆனுல், ஆழ்ந்து நோக்கும் பொழுது உண்மை யன்ருதல் நன்கறியப்படும். அஃது எவ்வாறு எனக் காண்போம்

திருவள்ளுவர் தாம் எம்மதத்தவராயினும் தமது நூலைச் சொல்லால் தமது மதத்திற்கே உரிய சிறப்பு நூலாகச் செய்யாது, தமது கொள்கையை மட்டும் வலியுறுத்திச் சொல்லால் பொதுநூலாகவே செய்து போந்தார் என்பது அனைவரும் ஒரு

முகமாக ஒப்புக்கொள்ளும் உண்மை. ஆகவே, பௌத்த சமண சமயக் கடவுளராக் குறிக்கும் 'பூமேல் நடந்தான், கமல ஊர்தி' என்னும் சிறப்புப் பெயர்களையே, 'மலர்மிசை ஏகினன்' எனக் குறித்தார் என்றல் பொருத்தமற்றதாகின்றது. மேலும் திருவள்ளுவர் இறைவனை அவனுக்கு இயல்பாய் என்றும் உள்ள குணங்களைக் குறிக்கும் வகையில் சில பெயர்களைக் கூறுகின்றாரே யல்லது, ஒவ்வொரு மதத்தில் சிறப்பாகக் கொள்ளப்படும் சில மரபுகளைக் குறிக்கும் வகையில் பெயர் கூறவில்லை. 'அகல் விசும்புளார் கோமான், அடியளந்தான், தாமரைக் கண்ணன், தாமரையினாள்' என்பனவெல்லாம் முதற்கடவுளைக் குறிக்கும் வகையில் திருவள்ளுவரால் சொல்லப்படவில்லை. வேறு சில கருத்துக்களைக் குறிப்பிடவே அவரால் அவைகள் சொல்லப்பட்டன. எனவே, 'மலர்மிசை ஏகினன்' என்பதும், இறைவன் இறைமைக் குணங்களுள் ஒன்றைக் குறித்ததாக வேண்டுமல்லது, 'பூமேல் நடந்தான், கமல ஊர்தி' என்னும் ஒருசார் சமயக் கடவுளர் பெயரைக் குறித்ததாகாமை தெளிவு. இக் கருத்தையே பரிமேலழகர், "இதனைப் பூமேனடந்தான் என்பதோர் பெயர்பற்றிப் பிறிதோர் கடவுட்கு ஏற்றுவாரும் உளர்" என இனமையாக உரைத்துச் சென்றார்.

'மலர்மிசை யேகினன்' என்னும் பெயரால் 'பூமேல் நடந்தான்' என்பதையே குறித்தாராயின், 'போதிக்கீழ் இருந்தான், பிண்டிக்கீழ் இருந்தான்' என்பனபோன்ற பெயர்களையும் அவர் தடையின்றித் தமது கடவுள் வாழ்த்தில் வழங்கியிருத்தல் கூடும்; அவ்வாறு வழங்கின், அவரைத் தடுப்பார் ஒருவரும் இல்லை. அங்ஙனம் வழங்காமையால், எந்த ஒரு சமயத்திற்குரிய கடவுள் சிறப்புப் பெயரையும் அவர் தமது கடவுள் வாழ்த்தில் கூறவில்லை என்பதே தேற்றம். 'ஆதி பகவன், அறவாழி யந்தணன்' என்பவற்றைச் சமண பௌத்த சமயக் கடவுட் பெயர் எனக் கூறுவார் கூற்றும் பொருந்தாது என்பதும் இங்குக் கூறிய இம்முறையினாலேயே நன்கு பெறப்படுகின்றது.

'மலர்மிசை ஏகினன்' என்பது 'பூமேல் நடந்தான்' என்னும் பெயராகாது, இறைவனது இயல்புகளுள் ஒன்றைக் குறித்தது எனின், அவ்வியல்பு யாது? என்னும் வினா எழுதல்

இயல்பாதலின், அதற்கு விடை காண வேண்டுவது இன்றியமையாததே.

'மலர்' என்னும் பெயரை அடைமொழியின்றிக் கூறினும் தலைமை பற்றி அது தாமரை மலரையே குறித்தல் வழக்கு. 'மலர் மிசை ஏகினன்' என்பதில், 'மலர்' என்றது புறத்தில் உள்ள தாமரை மலரைக் குறித்ததென்றல் பொருந்தாமையால், அகத்தில் உள்ள நெஞ்சத் தாமரையையே அஃது ஐயமின்றிக் குறிக்கும். எனவே, 'மலர்மிசை ஏகினன் என்பதற்கு, 'நெஞ்சமாகிய தாமரை மலரின்மேல் சென்றவன்' என்பது பொருளாம். இறைவன் அன்பரல்லாரது நெஞ்சத்தில் செல்வதில்லையாதலால், நெஞ்சத்தாமரை என்பது அன்பரது நெஞ்சத் தாமரையேயாம். இறைவன் அன்பரது நெஞ்சத் தாமரையின்கண் செல்வது அவர் நினைத்தபின்பே எனக்கொண்டமையால் பரிமேலழகர் 'ஏகினன்' என இறந்த காலத்தாற் கூறியது என்னையோ என ஐயுற்று அதற்கு அமைதி கூறினர். ஆயினும்,

" துஞ்சும் போதும் சுடர்விடு சோதியை
நெஞ்சுள் நின்று நினைப்பிக்கு நீதியை " (அப்பர்)

என்றபடி, வினைமாசு தீர்ந்து தூயராய அன்பரது நெஞ்சத் தாமரையில் இறைவன் அவர் தன்னை நினைதற்கு முன்பே நின்று அவரைத் தன்னை நினைக்குமாறும் செய்தல் பற்றி அங்ஙனம் கூறினர் எனல் பொருந்துமாகலின், அதுபற்றி ஐயமில்லை என்க. அன்றியும், 'பிறவிடத்துக் காணப்படாது அன்பரது நெஞ்சத் தாமரைக்கண்ணே சென்று நின்றவன்' எனினும் அமைவதேயாதல் அறிந்துகொள்க.

மலர் என்பது நெஞ்சைக் குறித்தல், ஆகுபெயர் அல்லது உருவகம் என்னும் இரண்டினுள் ஒன்றாலல்லது நேரிதின் இல்லையாதலின், இறைவனை அன்பரது உள்ளத்து இருப்பவன்' எனக்கூறுதல் திருவள்ளுவர் கருத்தாயின், அதனை நேரே, 'மனமிசை ஏகினன்' என்றாற்போல வெளிப்படையாகவே கூறிப்போகாது, 'மலர்மிசை ஏகினன்' எனக் குறிப்பாற்கூற வேண்டுவது என்னைஎனின் 'மலர்மிசை ஏகினன்' எனின் வருவதொரு சிறந்த பயன் கருதியே திருவள்ளுவர் அங்ஙனங் கூறினர். அப்பயன் யாது எனின், அன்பரது நெஞ்சத்தை'

மலர்' என்றமையால், அந்நெஞ்சத்தின் மென்மையும், பொலிவும், உயர்வும் தோன்றுதலும், பின் அதுவழியாக அன்னதோரிடத்தன்றிப் புலனாகாத இறைவனது சிறப்புத் தோன்றுதலுமே அப்பயன் என்க. எனவே, 'மனமிசை - ஏகினான்' என்றாற் போலக் கூறின், அதனாற் சிறப்பின்மை
அறிந்துகொள்க.

இனிக் கடவுளைப் புறத்துப் பூமேல் நடப்பவன் எனக் கொள்பவரும், அதற்கு உண்மைப் பொருள், அகத்தே அடியவரது நெஞ்சத்தாமரையின்கண் நிற்பவன் என்பதே' எனக் கொள்ளுதல் இன்றியமையாததாம். இல்லாவிடில், அங்ஙனம் நடப்பவன் எனக் கொள்வதால் வருவதொரு பயன் இல்லையாம். அடியவரது நெஞ்சத்தைத் தாமரையாக்கி, இறைவனை அதன்கண் விளங்குபவனாகக் கூறுதல் இத்துணை உயர்வுடையதாய் இருத்தலின், கடவுட் கொள்கையுடைய சமயங்கள் யாவும் இம்முறையை ஒருங்கே மேற்கொண்டன.

சைவ சமயத்தில் அகத்தே நெஞ்சத்தை நிலமுதல் (பிருதிவி முதல்) நாதம் ஈறான தத்துவங்களால் அமைந்த தாமரை மலராகவும், இறைவனை அத்தாமரை மலரின்மேல் இருப்பவனாகவும் வைத்து வழிபடுவதும், புறத்திலும் அங்ஙனமே இறைவனைப் பத்மாசனத்தின்மேல் எழுந்தருளுவித்து வழிபடுவதும் எங்கும் ஒருபடித்தாகக் காணப்படுவனவாம்.

" எரியாய தாமரைமேல் இலங்கி னாரும்
இடைமருது மேவிய ஈச னாரே "

' புந்தியாய்ப் புண்டரிகத் துள்ளாய் போற்றி " (அப்பர்)

என்றாற்போல இறைவனைத் தாமரை மலரின்மேல் வீற்றிருப்பவனாகக் கூறும் திருமுறைத் திருமொழிகள் பல. இன்னும்,

" நினைப்பவர்மனம் கோயிலாக் கொண்டவன் "

" காலையும் மாலையும் கைதொழு வார்மனம்
ஆலயம் ஆரூர் அரனெறி யார்க்கே " (அப்பர்)

" இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் "

" அடியார் உள்ளத் தன்புமீ தூரக்
குடியாக் கொண்ட கொள்கையும் சிறப்பும் "

(திருவாசகம்)

என்றாற்போல, 'இறைவன் அடியவர் உள்ளத்தையே உறைவிடமாகக் கொண்டவன்' எனக் கூறும் திருமொழிகளும் பல. இவற்றாலெல்லாம் இறைவன் அடியவர் உள்ளத்தில் அவர் நினைந்த வடிவொடு தோன்றுதலும் கூறப்படுவதாம். இறைவன் தனக்கென ஒருவடிவம் இல்லாதவன் ஆதலின், அன்பினால் நினைவார் நினைவின்வழி அவன் கொள்ளும் வடிவமெல்லாம் அருட்டிருமேனிகளேயாம். ஆகவே " மலர்மிசை ஏகினான் " என்ற தொடரில், திருவள்ளுவர் 'இறைவன் தனக்கென உருவம் இல்லாதவனாய், உயிர்களின் பொருட்டு அவ்வப்பொழுது கொள்ளும் அளவிறந்த அருட்டிருமேனிகளை உடையவனாவன்' எனக் கூறினாராதல் அறிக.

" நானாவித உருவாய் நமை ஆள்வான் " (சம்பந்தர்)

" ஆருருவ உள்ளுவார் உள்ளத் துள்ளே
அவ்வுருவாய் நிற்கின்ற அருளுந் தோன்றும் (அப்பர்)

என்றாற்போலும் திருமுறைத் திருமொழிகளைக் காண்க.

இங்ஙனம் அறநெறியிற் கூறப்பட்ட பொருளும் அருள்நெறியிற் கூறப்பட்ட பொருளும் ஒருபடித்தாய் விளங்குதலையறிந்து மக்கள் இருநெறியையும் கடைப்பிடித்து ஒழுகுவார்களாக.

# சித்தாந்த வினாவிடை

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், சித்தாந்தக் கலைமணி,
மகாவித்துவான்.
திரு. சி. அருணைவடிவேலு முதலியார்

[ மலர் 27 இதழ் 5 பக்கம் 256ன் தொடர்ச்சி ]

## பூதங்கள் ஐந்து

மாணக்கன் : 'ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி' என்னும் பூதங்கள் ஐந்தும் முறையே, 'சத்தம், பரிசம், உருவம், இரதம், கந்தம்' என்னும் தன்மாத்திரைகளினின்றும் தோன்றும் என்று அடிகள் அருளிச் செய்தீர்கள். ஆயினும், 'ஆகாயத்தினின்று வாயுவும், வாயுவினின்று தேயுவும், தேயுவினின்று அப்புவும், அப்புவினின்று பிருதிவியும் தோன்றும்' எனச் சிலர் சொல்லக் கேட்டுள்ளேன். அதனால், 'இவ்விரண்டு கொள்கைகளுள் எது உண்மை?' என்னும் ஐயம் உண்டாகின்றது. அதனை அடிகள் நீக்கியருளுதல் வேண்டும்.

ஆசிரியர் : நீ சொல்லியது உண்மை ! பூதங்களின் தோற்றத்தைச் சிலர் அவ்வாறுதான் கூறுகின்றனர்கள். அதற்குக் காரணம், 'வேதத்துள், 'ஆன்மாவினின்றும் ஆகாயம் தோன்றிற்று; ஆகாயத்தினின்றும் வாயுத் தோன்றிற்று, வாயுவினின்றும் தேயுத் தோன்றிற்று; தேயுவினின்றும் அப்புத் தோன்றிற்று; அப்புவினின்றும் பிருதிவி தோன்றிற்று' என இவ்வாறு கூறப்பட்டிருப்பதேயாகும்.*

மாணக்கன் : 'வேதத்துட் கூறப்பட்டது' என அடிகள் கூறியவாறே தேவாரத்துள்ளும்,

" இருநிலனது புனலிடைமடி தர,எரிபுக,
எரியதுமிகு
பெருவளியினில் அவிதர,வளி கெடவியனிடை
முழுவதுகெட

---

* तस्माद्वा एतस्मात् आत्मन आकाशः संभूतः । आकाशाद्वायुः । वायोरग्निः । अग्नेरापः । अद्भ्यः पृथिवी । (தைத்திரீயம்)

இருவர்களுடல் பொறையொடுதிரி எழிலுருவுடை
யவன்இனமலர்
மருவியஅறு பதம்இசைமுரல் மறைவனம்அமர்
தருபரமனே''

என வந்துள்ளது அன்றோ ?

ஆசிரியர்: ஆம்! வந்துள்ளது. அவையெல்லாம் தத்துவத் தோற்ற ஒடுக்கங்களை நுண்ணிதாக எடுத்து விளக்கக் கருதாது, அவற்றைப் பொதுப்படக் குறித்து, இறைவன் திருவருட் பெருமை ஒன்றையே வலியுறுத்திப் போதலைக் கருதினமையின். அவை தன்மாத்திரைகட்கும், பூதங்கட்கும் வேற்றுமை காட்டாது ஒற்றுமைப்பட வைத்துப் பொதுமையிற் கூறிப் போந்தன. சிவாகமங்கள் அவ்வாறின்றித் தத்துவங்களின் தோற்ற ஒடுக்கங்களை நுண்ணிதாக விளக்கக் கருதி எழுந்தனவாகலின், அவற்றுட் கூறியவாறே மேற்குறித்த வேதப்பகுதிக்கும், தேவாரத் திருப்பாடலுக்கும் பொருள்கொள்ளுதல் வேண்டும்.

'பௌட்கரம்' என்னும் உபாகமம், "ஒன்றின் ஒன்று ஏற்றமான குணம் காணப்படுதலால், ஆகாயத்தினின்று வாயுத் தோன்றவில்லை; வாயுவினின்றும் அக்கினி தோன்றவில்லை; அக்கினியினின்றும் அப்புத் தோன்றவில்லை; அப்புவினின்றும் பிருதிவி தோன்றவில்லை. காரணத்தில் உள்ள குணமே காரியத்தில் உண்டாவதால், ஒன்றின் ஒன்று குறைந்த குணம் உடைய ஆகாயம் முதலிய பூதங்களில் ஒன்று மற்றொன்றிற்குக் காரணம் அல்ல என்று மிகத்தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. *

காரியத்தில் உள்ள குணம் காரணத்திலும் உளதாக வேண்டும் என்பது தவிர்க்கமுடியாத ஒன்றாதலின், நிலம் நீரினின்று தோன்றிற்றெனின் நிலத்திற்கு உள்ள கந்த குணம் (நாற்றம்) நீரிலும் உளதாக வேண்டும். அங்ஙனமே நெருப்பினின்று நீர் தோன்றிற்று எனின், நீரில் உள்ள இரத குணம் (சுவை) நெருப்பின்கண்ணும் உளதாகவேண்டும். பிறவும் இவ்வாறேயாதலானும், ஆகாயம் முதலிய பூதங்கள் ஐந்தும் முறையே ஒன்று,

---

* नाऽकाशात् जायते वायुः न वायोरग्निसम्भवः । नाग्नेरापः ततः पृथ्वी धर्मातिशयदर्शनात् । कारणाद्गुणसंक्रान्तिर्युक्ता कार्येषु न स्वतः व्योम्नः पञ्चगुणत्वं स्यात् तथा सृष्टिक्रमो यदि ॥

(பௌட்கரம்)

இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து குணம் உடையன என்பது எல்லாச் சுருதிகட்கும் ஒப்பமுடிந்த ஒன்ருகலானும் பௌட்கரத்துட் கூறியதே தெளிபொருளும், 'பூதங்கள் ஒன்றி னின்று மற்ருென்று தோன்றும்' எனக் கூறும் வாக்கியப் பொருள்கள் குறிப்புப் பொருளும் ஆம் என்றே துணிவாயாக.

மாணுக்கன் : 'பூதங்கள் ஒன்றினின்று மற்ருென்று தோன் றும்' என்னும் வாக்கியங்கள், குறிப்பால் பொருள் உணர்த்து மாறு எங்ஙனம் என்பதை உணர்த்தியருளல் வேண்டும்.

ஆசிரியர் : 'ஆகாயத்தினின்றும், வாயுத் தோன்றிற்று' என்பது முதலிய வாக்கியங்கள் ஆகுபெயரால் ஆகாய முதலிய வற்றின் குணமாகிய சத்தம் முதலியவற்றை முதற்கண் உணர்த் திப் பின் இருமடியாகுபெயராய் அக்குணங்களோடு கூடிச் சிறந்து நிற்கும் பரிசம் முதலிய தன்மாத்திரைகளை உணர்த்தி நிற்கும். எனவே, 'ஆகாயத்தினின்றும் வாயுத் தோன்றிற்று' என்பது முதலிய வாக்கியங்கள், 'சத்த குணத்தொடு கூடிச் சிறந்து நிற்கும் பரிச தன்மாத்திரையினின்று வாயுத் தோன் றிற்று' என்பன முதலாகவே பொருள் தரும் என்று உணர்க.

'இவ்வாக்கியங்கட்கு இங்ஙனம் பொருள்கொள்ளுதல் பொருந்துவதே' என்பதை, 'ஆன்மாவினின்றும் ஆகாயம் தோன்றிற்று' என்னும் வாக்கியத்திற்கு, 'பரமான்மாவாகிய இறைவனது வியாபகத்தில் நிற்கும் முதற்காரணப் பொருளி னின்றும் ஆகாயம் தோன்றிற்று' எனப் பொருள்கொள்ளுதலே பொருத்தமாதல் பற்றி அறிந்துகொள்ளப்படும். அசித்துச் சித்தினின்றும் தோன்ருதாகலானும், ஆன்மாச் சித்தும், ஆகா யம் அசித்தும் ஆதலானும், 'ஆன்மாவினின்றும் ஆகாயம் தோன்றிற்று' என்னும் வாக்கியத்திற்கு சொற்பொருள் மாத் திரம் கொள்ளுதல் கூடாமை அறிக.

மாணுக்கன் ; அடிகள் அருளிச்செய்தவாறு பூதங்கள் தன் மாத்திரைகளினின்றே தோன்றுவன அன்றி ஒன்றிலிருந்து மற்ருென்று தோன்றுவன அல்ல எனத்தெளிந்தேன். பூதங்கள் பற்றி மேலும் அறிய வேண்டுவன உளவாயின் அவற்றை அருளிச்செய்தல் வேண்டும்.

ஆசிரியர் : ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி என்னும் ஐந்து பூதங்களும் முறையே செவி, தோல், கண், நாக்கு, மூக்கு என்னும் ஞானேந்திரியங்கள் ஐந்திற்கும் அவை சத்தம் முதலிய வற்றை அறிதற்கும், வாக்கு, பாதம், பாணி வாயு, உபத்தம்

என்னும் கன்மேந்திரியங்கள் ஐந்திற்கும் அவை நடத்தல் முதலிய தொழில்களைச் செய்தற்கும் முறையே துணையாய் நின்று அவற்றது ஆற்றலை மிகுவிக்கும். காரியத்தோடு காரணத்திற்கு ஒற்றுமை உண்மையால் பூதங்கட்கு முதலாகிய தன்மாத்திரைகள் ஐந்தும் அப்பூதங்களை விட்டு நீங்காது உடனுயே நிற்கும். பூதங்களினும் தன்மாத்திரைகள் சூக்கும மாதலின் அவை செவி முதலிய ஞானேந்திரியங்கட்கும், வாக்கு முதலிய கன்மேந்திரியங்கட்கும் நிலைக்களமாய் நிற்கும். உண்மை விளக்கம் முதலிய நூல்களில் பூதங்களே இருவகை இந்திரியங்கட்கும் இடம் என்றது, தன்மாத்திரைகளோடு பூதங்கட்கு உள்ள ஒற்றுமை பற்றியாம். எனவே, நிலத்தின்கண் ஓடும் தேர்மீது ஏறிச் செல்பவர்போல, செவி, வாக்கு முதலிய இந்திரியங்கள் புறத்தே காணப்படும் காது வாய் முதலிய அவயவங்களில் நிற்கும் சத்தம் முதலிய தன்மாத்திரைகளை இடமாகக் கொண்டு நின்று தம் காரியத்தைச் செய்யும் என்க.

(தொடரும்)

## விசேஷ நாட்கள்

### 10—6—68 முதல் 10—7—68 முடிய

| | | |
|---|---|---|
| 11—6—68 | திருஞானசம்பந்தர் | திருநட்சத்திரம் |
| ,, | திருநீலகண்ட யாழ்ப்பாணர் | ,, |
| ,, | முருகநாயனார் | ,, |
| ,, | திருநீலநக்கநாயனார் | ,, |
| 19—6—68 | ஏயர்கோன்கலிக்காம நாயனார் | ,, |
| 23—6—68 | கார்த்திகை, பிரதோஷம் | |
| 30—6—68 | மாணிக்கவாசகர் | திருநக்ஷத்திரம் |
| 1—7—68 | அமர்நீதி நாயனார் | ,, |
| 2—7—68 | ஆனித்திருமஞ்சனம் | |
| 7—7—68 | பிரதோஷம் | |

# "கொழிதமிழ்க் கூடலில் கொன்றை வேணியான்"

வித்துவான். திருமதி. ப. நீலா

(மலர் 27, இதழ் 6, பக்கம் 264 இன் தொடர்ச்சி)

## 3. திருநகரங் கண்டது.

திசையெங்கும் இசைகொண்ட தென்னர்குடியில் வந்த குலசேகர பாண்டியன் அவம் தொலைத்துச் சிவம்பெருக்கி அரசாள்கிறான் மணவூரில். அப்பெரும்பதியில் வளமிக்க வணிகர் குடித்தோன்றிய தனஞ்சயன் என்ற வணிகன் மல்லல் வாணிகம் செய்து மிகுபொருள் திரட்டியதோடு மகாதேவன் திருவடிகளில் மாறாத பக்தியும் கொண்டிருந்தான்.

ஒருநாள் வணிகன் மணவூரிலிருந்து மேற்றிசையிலுள்ள ஊர்களில் சென்று வியாபாரம் செய்து திரும்பும்போது கதிரவனும் மேற்றிசையில் இறங்கி மறைந்துவிட்டான். கடம்பவனத்தருகில் வரும்போது நன்றாக இருள் பரவிவிடவே அங்கேயே இரவுப்பொழுதைக் கழிப்பதற்காகத் தங்கினான்.

### இருளிலும் ஓர் இனிமை :

அரவு நீர்ச்சடை அண்ணலின் பாதப்போதுகளில் மனம் பதித்துத் தனித்துத் தங்கியிருந்தவன் கண்களில் ஓர் அதிசயப் பொன்விமானம் தெரிந்தது. காரிருள் நிறைந்த களிறுகள் எட்டு அவ்விமானத்தைச் சுமந்து கொண்டிருக்க அதனுள் கண்ணுக்கினிய பொருளாகக் கண்டான் சொக்கலிங்கப்பெருமானை. சற்றைக்கெல்லாம் தேவர்குழாம், அர்ச்சனை, அபிடேகம் இவற்றுக்குரிய பொருள்களோடு அவ்விடம் வந்தது அன்றைபதினம் சோமவாரம். அன்றைய நாளைச் சிவராத்திரி போலச் சிறப்புடைத்தாக்கினார்கள் தேவர்கள். நான்கு கால பூசனைகளும் குறைவின்றி நடைபெற்றன.

"சோம வார நன் னுளாதலாற் சுரர்களங் கெய்தி
வாம மேகலை மலைமகள் தலைமகன் மலர்ந்த
காமர் சேவடி பணிந்தவன் கங்குல்போற் கருதி
யாம நான்கினு மருச்சனை இன்புறப் புரிவார்"

தேவாதி தேவனுகிய கண்ணுதற் கடவுளை - நானமாதி பொருள் கொண்டு அபிடேகித்து - நல்லருச்சனை செய்து ஞானவெண் மதிச் சடையனைப் பரவிப் பணிந்த தேவர்களைத் தன் புண்ணியப் பயனுல் கண்டான் தனஞ்சயன்.

## மண்ணுளார் செய்த மாதவம் :


அருச்சனை உவந்துசெய்த அமரரர்களின் வினை விலகியது போலவே ககனத்தை மூடியிருந்த கங்குலும் ஒதுங்கியது. உதயப் பரிதியின் ஓங்கிய ஒளியில் தள்ளரும் சுடர் விமானத்தில் தனித்துறையும் பெருமானைத் தவிர கள்ளமில் உள்ளத்தவன் வேறு யாரையும் கண்டிலன். வியப்புமீதூர விம்மிதத்தால் மெய்சோர இவ்வதிசயத்தை மன்னனுக் குரைப்பேன் என்று விரைந்து அரண்மனை வந்தான். அடங்கலர் அடிபணியும் திருவடி வணங்கித் தான்கண்ட அற்புதக் காட்சியைத் திருமூன் தெரிவித்தான்.

புண்ணியப் பேறுடைய வணிகனை வாழ்த்திஞன் குலசேகர பாண்டியன். செஞ்சடை சூடிய சிவபெருமானை மனத்தால் வணங்கி அன்றிரவு துயில்கொண்டான் அரசர் கோமான். மண்ணுளார் செய்த மாதவப் பயனுல் பிறையணிந்த பெருமான் பாண்டியனின் கனவிலே தோன்றினுன்.

## நகரங்கண்டான் நாடாளும் மன்னவன் :

வினைபோக்கும் விமலன் - வழிபட்டாரின் சென்னிமிசை பாதப்போது சூட்டும் பிஞ்ஞகன் - மறைகடந்த தம் தொல்லுரு விளங்கக் காட்டுவார் ஒரு சித்தராய் கனவிடைத் தோன்றினுர். 'கடம்பவனத்தைத் திருத்திக் காடுகெடுத்து நாடாக்குக' - என்று அருளிச்செய்தார். சித்தரின் உத்திரவால் சிந்தை நிறைந்து நிமலனை வாழ்த்தி வணங்கும் வேளையில் வெய்யவனும் வேலை மிசை விழித்தெழுந்தான்.


தருமையாதீனத்தில் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி மகோற்சவம்




ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி
திருக்கல்யாணக்கோலத்துடன் வெள்ளியிரதத்தில்



ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரர்
திருக்கல்யாணக் கோலத்தை



தருமையாதீனம் குருபூஜை விழாவின்
பந்தல் முகப்பு.



ஸ்ரீ ஞானபுரீசுவரர் கோரதத்தில்
இடபவாகனரூடராய்க் காட்சி வழங்குதல்.

காலையில் அமைச்சர்களையும் - மாதவர்களையும் அழைத்துக் கனவின் திறத்தையும் - வணிகன் தனஞ்சயனின் கூற்றையும் வெளிப்படுத்தினான். எண்ணியது முடிக்கும் நல்லமைச்சர்கள் துணையோடு நீபமாவனம் சென்றான். பொற்றாமரையில் நீராடி பொன்விமானத்துள் எழுந்தருளி அருள்பாலிக்கும் அண்ணலைத் தொழுது ஏழையாகிய எங்களுக்கு அருள்புரியும் கருணைக் கடலே - எங்குடி முழுதும் பணிகொண்டாளவே இக்கானகம் அமர்ந்தீரோ' - என்றெல்லாம் போற்றினான். வேந்தன் ஆணையைச் சிரமேற்றாங்கிய ஆட்கள் அக்கானகத்தை அணிநகராக்கினர். மெய்யுணர்ந்தோர் சிந்தைபோல வெறுந்நிலமாக்கி - பெருமானின் திருவடியடைந்தாரின் பிறப்பறுவதுபோல மரங்களை வேரொடும் சாய்த்து விந்தை நகராக்கினர். உருவாகும் நகரத்தை எப்படியெல்லாம் சிறப்புறச் செய்யலாம் என்று நல்லார் நடுவிருந்து குலசேகரபாண்டியன் சிந்தித்திருக்கும் நேரத்தில் சித்தர் மீண்டும் தோன்றினார். திகைத்திருக்கும் மன்னன் தெளிவடையும்படி ஆலயம், கோபுரம், மண்டபம் இவைகளை இன்னவாறு அமை' என்றருளி மறைந்தார்.

தென்னவனின் அன்பிலகப்பட்ட சித்தர் அருளியபடி ஆகமவிதிகளுக்கு மாறுபடாமல் ஆலயம், கோபுரம் இவைகளோடு கூட, பத்ம, அருத்த, நிருத்த மண்டபங்களை அமைத்தான். நகரத்திலும் அந்தணர், வணிகர், வேளாளர் குடியிருப்புக்களையும், சதுக்கங்கள், அறச்சாலைகளையும் அமைத்தான்.

### மதுரத்துளி சிந்தியது :

அரசன் அணிநகர் சாந்தி செய்வது குறித்த நேரத்தில் அண்ணல் அது உணர்ந்து பொன்மயமான சடைமதிக் கலையின் புத்தமுதத்தை நகரில் உகுத்தான். நகரம் மதுரத்தன்மைபெற 'மதுரா நகர்' எனப் பெயர்பெற்றது. சர்வேஸ்வரனைப் பூசிக்க விஸ்வேஸனின் காசிப்பதியினின்றும் ஆகமம் வல்லார் வந்தனர். நித்திய நைமித்திய காமிய (பிராயச்சித்தம்) பூசைகள் முறைப்படி நடக்க ஏற்பாடு செய்தான் மன்னன். உத்தமக்குடியினர் மறைவழுவாமல் நடந்து சைவத்தையும் தருமத்தையும் காத்தனர்.

பாண்டிய மன்னன் தன்குலம் விளங்க மலையத்துவசனைப் பெற்று மகிழ்ந்து என்றும் மாறா இன்பம் தருவதாகிய அருளடியாகிய அரனடி அடைந்தான். ( வளரும் )

### தருமையாதீனத்தில்

# திருநெறியத் தெய்வத் தமிழ் மாநாடு

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீன முதற்குரவர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளின் குருபூஜை விழாவை யொட்டி பத்து நாட்கள் ''திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு'' ஆதீன மடாலய முகப்பிலுள்ள திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் நிகழ்ந்தது. ஒவ்வொரு நாளும் மாலை 6 மணி முதல் மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடங்கி நடைபெற்றன.

8-5-68 புதன்கிழமை திருக்குறள் கருத்தரங்கம். குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள் (குன்றக்குடி அடிகளார்) அவர்கள் தலைமையேற்று தலைமையுரையில் குறிப்பிட்டதாவது :-

திருக்குறள் காலம் கற்பனை கடந்த பொது நூலாக உள்ளது. இதன் உரைகள் இதன் பெருநிலையையும் பொது நிலையையும் விளக்குகின்றன. பரிமேலழகர் உரை இவற்றுள் செப்பம் வாய்ந்ததாக உள்ளது. இவ் வுரைகளைக் கொண்டு திருவள்ளுவர் உள்ளத்தை அணுகுதல் வேண்டும். ஆட்சியியல் முறையிலும், மெய்யறிவியல் முறையிலும், அருளியல் முறையிலும் திருவள்ளுவர் கண்ட புதுமைகள் இன்று உலகிற்கே வழிகாட்டும் தகைமை உடையன.

திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் பேசுகையில், திருக்குறளில் உடைமைகள் என்று சொல்லப்படுவனவற்றையே நம் உடைமைகளாகக் கொள்ளவேண்டும் என்றும், நரி, யானை, காக்கை, முதலை, தேர், கப்பல் முதலிய பல பொருள்களையும் வைத்துக்கொண்டு வள்ளுவர் விளக்கும் உண்மைகள் பல என்றும், படும் என்ற முடிவுடைய குறட்பாக்கள் பல என்றும் கூறி விளக்கிப் பேசினார்கள்.

மெய்யறிவியல் பற்றிச் செந்தமிழ்ச் செல்வர் திரு. கி. வா. ஜகந்நாதன் M. A., அவர்கள் பேசும்போது, எப்பொருள் எத்தன்மைத்தாயினும் யார்யார்வாய்க் கேட்பினும் மெய்ப்பொருள் காண்டல் அறிவு என்றும், நில்லாதவற்றை நிலையின என்று

உணரும் புல்லறிவாண்மை கடை என்றும், நிலையாமை உணர்ந்து, ஓர்த்து உள்ளம் உள்ளது உணர்தல் வேண்டும் என்றும், ஆயின் பேர்த்துள்ள வேண்டா பிறப்பு என்றும், மெய்யறிவு சான்ற வாழ்வே அருளுடைமை ஆக்குவிக்கும் என்றும் விளக்கிப் பேசினார்கள்.

திருக்குறள் திரு. வீ. முனிசாமி M. A., B. L.. அவர்கள் அறவியல் என்பது பற்றிப் பேசும்போது, எது வள்ளுவர் அறம் என்று விளக்கி, உண்டு உடுத்து உறங்கிக் காலத்தைப் பாழ்படுத்துவது அறிவுடைமையாகாது என்றும் சிந்தித்துத் தெளிதலே, பண்புகள் மேவுதலே அறம் என்றும், வள்ளுவர் அறம் எல்லோரானும் பின்பற்றப் பெறல் எளிது என்றும் அதனைப் பின்பற்றி வாழ்வதே குறிக்கோளாகக் கொள்ளுதல் வேண்டும் என்றும் குறிப்பிட்டார்கள்.

திரு. ஔவை. துரை. நடராஜன் M. A., M. Litt. அவர்கள் வாழ்வியல் இல்லறம், துறவறம் என்று இருகூறு பட்டதாம் என்றும், வையத்துள் வாழ்வாங்கு வாழ்வதே தெய்வத்துள் வைக்கப்படும் பெரும்பேற்றினை விளக்கும் என்றும் அழகுற விளக்கிப் பேசினார்கள்.

இறுதியிற் பேசிய பேராசிரியர் திரு. தி. வ. காந்திமதி நாதன் B. A. ( Hons.) அவர்கள் ஆட்சியியல் பற்றிப் பேசும் போது குறிப்பிட்டவை ; திருக்குறள் அரசியல் முழுமையும் ஆட்சியியல் பற்றிய நுட்பமான கருத்துக்கள் உடையவை. வள்ளுவர் ஒற்றுடல், தூது என்ற இரண்டு நுட்பப் பகுதியை விளக்குகின்றார். ஒற்றரால் நிருவாகம் செய்து நாட்டுநடப்பை மன்னன் அறிதல் வேண்டும். சிற்றினம் சேரக் கூடாது. பெரியாரைத் துணைக்கொண்டு, செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடன் நடத்தல்வேண்டும்.

9—5—68 வியாழக்கிழமை பட்டிமன்றம். சிலப்பதிகாரம் அற நூலா? இலக்கிய நூலா? என்பதுபற்றி நிகழ்ந்தது சிலம்புச்செல்வர் திரு. ம. பொ. சிவஞானக்கிராமணியார் M.L A., அவர்கள் தலைமையில் விவாதம் நிகழ்ந்தது.

'அறநூல்' என்பது பற்றிச் செந்தமிழ்ச்செல்வர் திரு. கி. வா. ஜகந்நாதன் M. A., அவர்கள், திரு. ஔவை. துரை. நடராசன் M. A. M. Litt. அவர்கள், வித்துவான் திரு. நா. பார்த்தசாரதி அவர்கள் ஆகியோர் விரிவுரை நிகழ்த்தினர்.

இலக்கிய நூல் என்பதுபற்றி திரு. கா. செல்லப்பன் M. A., அவர்கள், செஞ்சொற்கொண்டல், வித்துவான் திரு சொ. சிங்காரவேலன் M. A,, Dip. Ling. அவர்கள் வித்துவான் திரு. இரா. செல்வக்கணபதி அவர்கள் ஆகியோர் விரிவுரை நிகழ்த்தினர். சிலப்பதிகார விளக்க நிகழ்ச்சியாக அமைந்த இப் பட்டிமன்றத்தைத் திரளான மக்கள் கூடிக் கேட்டு மகிழ்ந்தனர்.

இலக்கியம் உடல்போன்றது. அறம் உயிர்போன்றது. எந்த இலக்கியமும் அறம் என்ற அடிப்படையில்தான் உருவாகும். "அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயன்" என்பது இலக்கணவிதி.

"அரைசியல் பிழைத்தோர்க்கு அறம்கூற்றுவதும்
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்
ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்"

என்பதும் சிலப்பதிகாரம் கூறுகின்ற அறம். இந்நூல் அறத்திற்கு இலக்கியமாக விளங்குவது என்று தலைவர் முடிவுரையில் கூறி விவாதத்தைச் சிறப்பாக முடித்துவைத்தார்.

10—5—68 வெள்ளிக்கிழமை திருமுறை வளங்கள் என்னும் பொருள்பற்றிக் 'கவியரங்கம்' கொத்தமங்கலம். திரு. சுப்பு அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வித்துவான், திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள் 'பக்தி வளம்' என்னும் பொருளிலும், சித்தாந்தப் புலவர்மணி, திரு. ந. இரா. முருகவேள் M. A., M .O. L., அவர்கள் 'பண்பு வளம்' என்னும் பொருளிலும், தருமையாதீனப் புலவர். மகா வித்துவான், திரு. சி. அருணைவடிவேல் முதலியார் அவர்கள் 'அருள்வளம்' என்னும் பொருளிலும் கவிதைகளை இயற்றி அரங்கேற்றினர்கள்.

11-5-68 சனிக்கிழமை 'கம்பராமாயணம்' என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கம் திரு. சா. கணேசன் M. L. C. அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திரு. V. K. C. நடராசன் I. A. S., 'வீரச்சுவை' என்பது பற்றியும், திரு. இரா. இராதாகிருஷ்ணன் M. A.. 'பக்திச்சுவை' என்பது பற்றியும், திருமதி. இராஜேஸ்வரி நடராசன் B. A., அவர்கள் 'இன்பச்சுவை' என்பது பற்றியும், வித்துவான்' திரு. அ. நடேச முதலியார் அவர்கள் 'இலக்கியச்சுவை' என்பது பற்றியும் விரிவுரை நிகழ்த்தினர்கள்.

தமிழில் மிகச் சிறந்த காவியமாக விளங்குவது கம்பராமாயணம். வீரம், காதல். பக்தி முதலிய அனைத்துப் பண்புகளும்

அமைந்த பேரிலக்கியமாகத் திகழ்கின்றது. கம்பசித்திரம் என்று நாட்டு மக்கள், இந்நூலை அழைப்பதிலிருந்தே இந்நூலின் சிறப்பை நாம் நன்கு அறியலாம் என்பனபோன்ற பல கருத்துக் களை அனைவரும் வெளியிட்டனர்.

12—5—68 ஞாயிற்றுக்கிழமை 'பாரதப்போரில் நீதி' என்பதுபற்றி பட்டிமன்றம் நிகழ்ந்தது. திரு. P. G. கருத் திருமன் B. Sc., M. L. A., அவர்கள் தொடக்கவுரை நிகழ்த்தி னார்கள்.

முத்தமிழ்ப்பெருஞ்சொற்கொண்டல், புரிசை திரு. முருகேச முதலியார் அவர்கள் நடுவராக இருந்தார்கள். பாண்டவர் பக்கம் நீதி என்பதுபற்றி திரு. S. சத்தியசீலன் M. A., திரு. K அரங்காச்சாரியார் M.A., B.T., திரு T. V. கோபாலன் M.A., ஆகியோர் விரிவுரை நிகழ்த்தினார்கள். கௌரவர்பக்கம் 'நீதி' என்பதுபற்றி திரு. அ. கலியபெருமாள் M. A., திரு. சு. சாமி ஐயா M. A., வித்துவான், திருமதி. ப. நீலா ஆகியோர்கள் விரிவுரை நிகழ்த்தினார்கள்.

மகாபாரதம் என்ற நூல் சிறந்த நீதி நூல். பாரதப் போரிலே பாண்டவர் பக்கமும், கௌரவர் பக்கமும் நீதி இருக் கின்றது. ஆனால் கௌரவர்களைவிட பாண்டவர் பக்கமே நீதி மிகுந்து இருக்கின்றது என்று தலைவர் முடிவுரை கூறிப் பட்டி மன்றத்தைச் சிறப்பாக முடித்தார்கள்.

13—5—68 திங்கட்கிழமை 'தமிழ்மொழிச் சிறப்புக்கள்' என்னும் பொருள்பற்றி திரு. ம ப. பெரியசாமித்தூரன் அவர்கள் தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது.

திரு. அ வெ. ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் 'தொன்மை' என்பதுபற்றியும், திரு. முடியரசன் 'செம்மை' என்பது பற்றி யும், புலவர், திரு. ப. அரங்கசாமி 'வளமை' என்பது பற்றியும், வித்துவான், திரு. ச. குமாரஅழகப்பன் 'பெருமை' என்பது பற்றியும் கவிதைகளை இயற்றி அரங்கேற்றினார்கள்.

14—5—68 செவ்வாய்க்கிழமை 'மொழி நிறைவிற்கு வேண்டு வன' என்னும்பொருள்பற்றிய கருத்தரங்கம் பன்மொழிப்புலவர் திரு. கா. அப்பாத்துரை M. A.. M. Litt. அவர்கள் தலைமையில் நடைபெற்றது திரு. ம. ப. பெரியசாமிதூரன் 'கலைச்சொற்கள்' என்பதுபற்றியும், திருநெறிச்செம்மல். வித்துவான், திரு. சா, குருசாமி தேசிகர் அவர்கள் 'இலக்கியம்' என்பது பற்றியும், வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் M. A., Dip-Ling அவர் கள் 'மொழிபெயர்ப்பு' என்பது பற்றியும் விரிவுரை நிகழ்த்தி னார்கள்.

அறிவியல், கணிதஇயல், பொறிஇயல் ஆகிய எல்லாத் துறைகளிலும், கலைச்சொற்கள் பெருகவேண்டும். இலக்கியங்கள் பல்க வேண்டும், மொழிபெயர்ப்பு நிரம்ப வேண்டும் என்று அனைவரும் விரிவுரை நிகழ்த்தினார்கள்.

15—5—68 புதன்கிழமை சேரர் திருநாள். வித்துவான் ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள், திருமுகப் பாசுரம் என்பது பற்றியும், தருமையாதீனப் புலவர், சித்தாந்தக் கலைச் செல்வர் திரு. க. வச்சிரவேல் முதலியார் பி. ஏ., எல். டி. அவர்கள் சேரமான் பெருமாள் என்பது பற்றியும், வித்துவான், திரு. வி. சா. குருசாமி தேசிகர் அவர்கள் சேரன் செங்குட்டுவன் என்பது பற்றியும் விரிவுரை நிகழ்த்தினார்கள்.

சேர மன்னர்கள் செந்தமிழ்ப்பணியும், சிவப்பணியும் செய்தவர்கள் இவர்களுள் சேரமான் பெருமாள் அடியார்களுள் ஒருவராகத் திகழ்கின்றார். அவரிடம் பாணபத்திரருக்காகப் பெருமான் திருமுகம் அளித்ததே அவருடைய பக்தியை விளக்கப் போதுமானதாகும். சேரன் செங்குட்டுவன் பத்தினியாகிய கண்ணகிக்குக் கோயில் எடுப்பதற்கு இமயத்திலிருந்து கல்லெடுத்து கங்கையில் முழுக்காட்டி பின்பு சிலை எடுத்து விழாக் கொண்டாடினான் என்று விரிவுரை நிகழ்த்தினார்கள்.

16—5—68 வியாழக்கிழமை பல்லவர் திருநாள். வித்துவான் ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள், 'நரசிம்மவர்மன்' என்னும் பொருளிலும், திரு. பு. ர. சுவாமிநாதன் எம். ஏ. எல். டி 'மகேந்திரவர்மன்' என்னும் பொருள் பற்றியும், விரிவுரை நிகழ்த்தினார்கள்.

பல்லவர்கள் சமயப்பணிகள் பல செய்தார்கள். மகேந்திரவர்மன் சமண சமயத்தைச் சார்ந்திருந்தான். அவனைச் சமண சமயத்திலிருந்து சைவசமயத்திற்கு மாற்றிய பெருமை திருநாவுக்கரசருக்கே உண்டு மகேந்திரவர்மன் பல சைவ ஆலயங்களைக் கட்டினான், குகைக் கோயில்கள் பல உண்டாக்கிய பெருமை பல்லவர்களுக்கு உரியது என்ற பல கருத்துக்களை அனைவரும் வெளியிட்டுச் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

17—5—68 வெள்ளிக்கிழமை பாண்டியர் திருநாள். காலையில் 9 மணி அளவில், வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் 'வரகுண பாண்டியன்' என்னும் பொருள் பற்றியும், மகா வித்துவான் திரு. ச. தண்டபாணி தேசிகர் அவர்கள் 'நின்றசீர் நெடுமாறன் என்னும் பொருள் பற்றியும், வித்துவான் திரு கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள் 'பராக்கிரம பாண்டியன்' என்னும் பொருள்பற்றியும், வித்துவான்

திரு வி. சுபேசன் அவர்கள் 'பாண்டியர் சமயப்பணி' என்னும் பொருள்பற்றியும் விரிவுரை நிகழ்த்தினார்கள்.

பாண்டியர் சைவத்தைப் பரப்புவதற்காகப் பல சைவ ஆலயங்களை நிறுவினர். இவர்கள் சைவத்தைப் பரப்புவதோடு செந்தமிழையும் பரப்பினர். பாண்டியர்கள் சிறந்த சிவபக்தர்கள். பெருமான் சோமசுந்தர பாண்டியனாகவும், உமாதேவி தடாதகாதேவியாகவும், முருகப்பெருமான் உக்கிரகுமார பாண்டியனாகவும் அவதரித்தனர். சங்கம் வளர்த்தனர் பாண்டியர். இவைபோன்றன பாண்டியர்களின் தொன்மை, பெருமை முதலியவற்றை நமக்கு தெளிய எடுத்து விளக்குகின்றன என்ற பல கருத்துக்களை அனைவரும் வெளியிட்டு சொற்பொழிவு நிகழ்த்தினர்.

18—5—68 சனிக்கிழமை சோழர் திருநாள். காலை 9-மணி அளவில் தமிழக இந்துசமய அறநிலை ஆணையர் உயர்திரு. தி ஆ. இராதாகிருட்டிணன் பி ஏ. பி. எல். அவர்கள் தலைமையில் வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் 'அநபாயன்' என்னும் பொருள்பற்றியும், வித்துவான். திரு. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை 'சோழர் சமயப்பணி' என்னும் பொருள் பற்றியும் விரிவுரை நிகழ்த்தினார்கள்.

மாலை 6-மணி அளவில் கனம், திரு. என். கிருஷ்ணசாமி ரெட்டியார் பி. ஏ., பி. எல், அவர்கள் தலைமையில் திருக்குறள் வேள், திரு. ஜி. வரதராஜப்பிள்ளை அவர்கள் 'வளவர் கோமான்' என்னும் பொருள் பற்றியும் சிவநெறிச்செல்வர், வித்துவான். திரு. கே. எம். வேங்கடராமையா எம். ஏ., அவர்கள் 'இராஜ ராஜன்' என்னும் பொருள்பற்றியும் விரிவுரை நிகழ்த்தினார்கள்.

சோழர்கள் சிறந்த சிவபக்தர்களாக இருந்தார்கள். இராஜ ராஜன் தஞ்சையில் இராஜராஜேச்சுரம் என்னும் கோயிலை எழுப்பி சிவாகம முறைப்படி பூஜைகள் நடக்கும்படி செய்தான். திருமுறை ஓதுவதற்கு ஓதுவார்களை நியமித்து அவர்களுக்கு உதவி செய்தான் என்றும், சோழர்களுக்குப் பெருமைதருவது திருமுறைகளை வெளிக் கொணர்ந்தது என்ற பல கருத்துக்களை வெளியிட்டுச் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

9—5—68 வியாழக்கிழமை திரு. ம. பொ. சிவஞானக் கிராமணியார் அவர்கள் தலைமையில் நடைபெற்ற சிலப்பதிகாரம் பற்றி நடந்த கருத்தரங்கமும் 14—5—68 செவ்வாய்க்கிழமை 'மொழிநிறைவிற்கு வேண்டுவன' என்னும் பொருள்பற்றி நிகழ்ந்த கருத்தரங்கமும், திருச்சி வானொலி நிலையத்தாரால் ஒலிபரப்பப்பட்டன.

# கலைவளர் மாளிகை

திரு. அ. கலியபெருமாள் M. A.

( மலர் 27, இதழ் 5, பக்கம் 216 இன் தொடர்ச்சி )

இக்காலத்தே இசைத்துறையில் வழங்கும் சொற்களைக் கண்டு மயக்கம் கொண்டு தமிழில் இசையில்லை என்பார் அறியாதவரே. ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகட்கு முன்பே இசைத் தமிழைப் பேணி வளர்த்தநாடு தமிழகம். பண்டைத் தமிழர் வளர்த்த இசை நுணுக்கங்களைப் பகர்தற்குச் சிலப் பதிகாரத்தின் அரங்கேற்றுகாதை ஒன்றே போதும். பழம் நழுவிப் பாலில் விழுந்ததுபோல அவ்வரங்கேற்று காதைக்கு அடியார்க்கு நல்லார் உரை விளக்கம் அமைந்திருக்கிறது.

அடியார்க்கு நல்லார் உரைப்பாயிரத்தின் மூலமாகப் பழந்தமிழ் இசை நூல்களைப்பற்றி அறிகிறோம். பெருநாரை பெருங்குருகு, நாரதன் செய்த பஞ்சபாரதீயம் முதலிய இசைத் தமிழ் நூல்கள் சிறந்தன என்று அவர் குறிப்பிடுகிறார். முறுவல் சயந்தம் குணநூல் செயிற்றியம் முதலியவற்றுள்ளும் ஒரு சில சூத்திரங்கள் கிடைக்கின்றனவே அன்றி முழுமையும் கிடைத்தில என்று கூறுகிறார். குறுமுனி மாணுக்கர் சிகண்டி செய்த இசை நுணுக்கம் என்னும் நூல் அவர்காலத்தில் இருந்தது என்பதும் விளங்குகிறது.

இன்று வழங்கும் சரிகமபதநி என்னும் எழுத்துக்களின் விரிவான சட்சம், ரிடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிடாதம் ஆகிய ஏழிசையும் தமிழர்க்குப் புதுவதன்று. இவ்வேழிசையும் குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, தாரம் என அக்காலத்தே வழங்கப்பட்டது. குழலிலும் யாழிலும் இவ் வேழிசையும் இசைத்தனர் பாணர் என்று சிலம்பு செப்புகிறது.

" குழலினும் யாழினும் குரல் முதல் ஏழும்
வழுவின் றிசைத்து வழித்திறம் காட்டும்
அரும்பெறல் மரபின் பெரும்பாண் "

(இந்திரவிழவூரெடுத்த காதை 35-37)

இசைத்துறையில் தமிழர்க்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லை யென்று துணிந்து கூறலாம். தமிழர், தம் இசையால் வன்பைத் தகர்த்து அன்பைப் பெருக்கினர். தீய நினைவுகள் உடையோர் கூட இசைகேட்டுத் திருந்தினர் என்பதற்கு இலக்கியத்தில் ஆதாரம் உள்ளது.

யாரேனும் வருகின்றனரா என்று கவனித்தவாறு கல்லும் முள்ளும் செறிந்த வழியில் ஆறலை கள்வர் காத்துக்கொண்டிருக்கின்றனர். கரத்திலே இரத்தம் சுவைக்கும் கூரிய வேல்; கருத்திலே களவு செய்யும் தீய எண்ணம். நெருப்புத் துண்டெனத் தோன்றும் விழிகள் அவர்தம் நேர்மையற்ற கொடூர மனத்தைப் பிரதிபலிக்கின்றன. இத்தகையார் செவிகளில் இனிய பாலைப்பண் மிதந்துவந்து பாய்கிறது. அடுத்த கணம் அவர் தம் கரங்களிலிருந்து வேல் நழுவுகிறது; மறைகிறது மருள்; நிறைகிறது அருள். மறம் மாறுகிறது. கண்களில் கடுமையில்லை; இனிமை ததும்புகிறது, மனம் மாறுகிறது. அறம் உயிர்க்கிறது.

" ஆறலை கள்வர் படைவிடு அருளின்
மாறுதலை பெயர்க்கும் மருவின் பாலை "

(பொருநர். 21-22)

கொடுமையைப் போக்கிக் குளிர்ந்த அருளை ஊட்டும் இசையின் ஆற்றல்தான் என்னே!

தமிழர் எழுப்பிய இசை, பகுத்தறிவற்ற உயிர்களையும் கட்டுண்டு கிடக்கச் செய்தது. அகநானூற்றில் ஒரு காட்சி! செழித்து வளர்ந்த தினைப்புனம், உயரமாக இடப்பட்டுள்ள பரணில் கள்ளுண்டு இருக்கிறான் உரவுசேர் கானவன். மெல்லெனக் காற்று மிதந்து வருகிறது. அக்காற்றில் உலரும் வண்ணம் சாந்துபூசிய அடர்ந்த கூந்தலைக் கோதுகிறாள் அவன் மனைவி. அவள் வாய் குறிஞ்சிப்பண்ணை இசைக்கிறது. அப்பண்ணைக் கேட்கிறது தினை உண்ணப் புனத்தில் புகுந்த யானை; இசைமயக்கத்தில் தினையை உண்ண வேண்டும் என்ற நினைவையே இழந்துவிடுகிறது. தினையையும் உட்கொள்ளவில்லை, இருந்த இடத்தை விட்டும் பெயரவில்லை. துயில் வரப்பெறாத அதன் கண்களைத் தூக்கம் ஆட்கொள்கிறது. இசையில் கட்டுண்டு இனிய உறக்கம் கொள்கிறது.

" உளைமான் துப்பின் ஓங்குதினைப் பெரும்புனத்துக்
கருதில் கானவன் பிழிமகிழ்ந்து வதிந்தென
உரைத்த சாந்தின் ஊரல் இருங்கதுப்பு
ஐதுவிரல் அசைவளி ஆற்றக் கைபெயரா
ஒலிபல் வார்மயில் உளரினன் கொழுச்சி
பெருவரை மருங்கில் குறிஞ்சி பாடக்
குரலுங் கொள்ளாது நிலையினும் பெயராது
படாஅப் பைங்கண் பாடுற்று ஒய்யென
மறம்புகல் மழகளிறு உறங்கும் நாடன் " (அகம். 102)

குறுந்தொகையில் மற்றொரு காட்சி! முற்றி விளைந்த தினைப்புனத்தைக் காவல்காத்துக் கொண்டிருக்கிருள் மூரல் சிந்தும் குழப்பெண். அவள் கையில் குளிர் என்னும் கிளிகடி கருவி இருககிறது. தினையைத் தின்னக் கிளிகள் வருகின்றன. கிளிகடி கருவியால் ஓட்ட முயல்கின்ருள் அக்கிளிமொழி. ஆனால் கிளிகடி கருவி இசையோடு பொருந்தி இனிய தாளத்தை உடையதாக இருத்தலின் கிளிகள் அதைக் கொடிச்சியின் பாட்டு என்று கருதி மயங்கி அப்புனத்தைவிட்டு நீங்காமல் இருக்கின்றன.

" படுகிளி கடியும் கொடிச்சி கைக்குளிரே
இசையின் இசையா இன்பாணித்தே
கிளியவள் விளியென எழல் ஒல்லாவே " (குறுந் 291)

தமிழ்நாட்டின் வண்டுகள் கூட இசைத்திறன் உடையனவாக விளங்கின. அசுணம் இசையைப் பருகி உயிர்வாழ்வது என்று கூறுப. அத்தகு அசுணங்கள் பெரும் மலைப்பிளவுகளில் இருக்கின்றன. கரும்புலி அட்டகளிற்றின் மதநீரில் மொய்த்து ரீங்காரம் செய்கிறது கருவண்டு. அவ்வொலியை யாழிசை என்று கருதிக் கவனமாகக் கேட்கின்றன அசுணங்கள்.

" இரும்புலி தொலைத்த பெருங்கை யானைக்
கவுண்மலிபு இழிதரும் காமர்கடாஅம்
இருந்திறைத் தொகுதி ஆர்ப்ப, யாழ்செத்து
இருங்கள் விடரளை அசுணம் ஓர்க்கும் " (அகம் 88)

பகுத்தறிவுடையோர் யாழிலே எழுப்பும் செவ்வழிப் பண்ணை அறுகாற் பறவை மிழற்றுகிறது. "செவ்வழிப் பண்ணில் சிறைவண்டரற்றும்" (காடுகாண்காதை) என்று இளங்கோவடிகள் கூறுகிறார். வண்டுகள் யாழோசை எழுப்புவதை "மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய" என்றும், "பொங்கர் வண்டினம் நலவியாழ் செய்ய" என்றும் சாத்தனார் மணிமேகலையில் குறிப்பிடுகிறார். இயற்கையிலும் கலையைக் கண்டுவக்கும் உள்ளம் தமிழருக்கு இருந்தது.

செவிக்கும் விழிக்கும் விருந்தளிப்பது கூத்து. கூத்து நடைபெற அரங்குவேண்டும். இணைந்தொலிக்கக் குழல் வேண்டும்; யாழ்வேண்டும். கண்ட இசை வேண்டும். இதோ ஒரு கூத்து நடைபெறுகிறது பாருங்கள். மணங்கமழும் பூம் பந்தரே அரங்கு. துபபி குழலிசைக்கிறது. வண்டினம யாழ் ஒலி எழுப்புகிறது. குயில் பாடுகிறது. மயில் என்னும் மங்கை நல்லாள் அரங்கேறி மனங்கவரும் முறையில் ஆடுகிறாள்.

"கொம்பர்த் தும்பி குழலிசை காட்டப்
பொங்கர் வண்டினம நல்லியாழ் செய்ய
வரிக்குயில் பாட பாமயில் ஆடும்
விரைப்பூம் பந்தர்". (மணி. 19 : 57-60)

இத்தகைய எழிலார்ந்த ஆடலை மந்திகளும் கண்டு இன்புறுகின்றன.

"குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்டினம் நலவியாழ் செய்ய
வெயில் நுழைபறியாக் குயில் நுழைப் பொதும்பர்
மயிலாடரங்கின் மந்தி காண்பன" (மணி. 4:3-6)

அகநானூற்றில் மந்திகள் காணும் ஆடலையும் காண்போம். மூங்கிலின் துளைகளில் காற்று பொருந்துவதால் எழும் ஒலி குழலிசையாகிறது. வீழும் அருவியின் இனிய ஒலி குழலின் இசையாகிறது. கலைமான் கூட்டம் தாழ ஒலிக்கும் கடுங்குரல் பெருவங்கியத்தின் ஒலியாகிறது. மலைப்பூஞ்சாரலின் வண்டுகளின் ஒலி யாழிசையாகிறது. மந்திகள நோக்க மாமயில் விறலி ஒப்ப ஆடுகிறது.

(தொடரும்)

# வாதவூரரும் வடலூராரும்

செஞ்சொற்கொண்டல், வித்துவான்,

திரு. சொ. சிங்காரவேலன் M. A.. Dip. Ling

## அழகிய பாமாலை :

இராமலிங்க அடிகள் திருவாசகத்திற் பெரிதும் ஈடுபட்ட பேரருளாளர். மாணிக்கவாசகரது அருள்மொழிகளிடத்து அடிகட்கிருந்த பெருவிருப்பம் பேசவொண்ணுப் பெருமை உடையதாகும். சுருங்கக் கூறின் திருவாசகமே அடிகளது வாழ்வை உருவாக்கிற்று என்பர். அன்பே உருவாய் விளங்கிய ஆளுடைய அடிகள் மீது, இராமலிங்க அடிகள் கொண்டிருந்த அயரா அன்பு ஓர் அழகிய பாமாலையாக உருப்பெற்றுள்ளது. அதன் கண் அமைந்த ஒவ்வொரு பாடலும் தனிச் சிறப்புடையதாகவே விளங்குகின்றது. அப்பாமாலைக்கு அவர் சூட்டி உள்ள பெயர் '' ஆளுடைய அடிகள் அருள்மாலை '' என்பதாகும். அப்பாமாலையின் இனிய அருள்மணத்தை இங்கு நுகர முயல்வோம்.

## அருளனுபவம் :

திருவாசகத்தின் சிறப்பு வேறெதனுலும் இன்றி அஃது அடைவிக்கும் அருளனுபவத்தாலேயே விளங்கித் தோன்றுவதாகும். சமயநெறிக்கண் ஆழ்ந்துணர வேண்டியதும் அவ்வனுபவமே ஆகும். அனுபவமில்லாதாரது வெற்றுரை பொழுது போக்குக்குப் பயன்படும் அல்லாமல், வாழ்வின் உள்ளொளி காண உறுதுணை புரியாது. வாழ்வின் உள்ளொளிகாண விழைவோர் அதற்கேற்ற கருவிகளையே தக்க துணையெனக் கொள்ளுதல் வேண்டும். பொய்யாம் உலகப் புறநிலைக் கோலங்கள் அனுபவம் காணத் துணை புரிய மாட்டா.

புற்றீசல் போற் பெருகிக் கிடக்கும் ஆரவார நூல்கள் சமைய உலகிற்குத் தேவையில்லை. உயிரின் கடனை அறிவுறுத்தும் ஒப்பற்ற ஒருநூல் போதும் என்றே கூறலாம். திருவாசகம் இத்தகு அருள் அனுபவநூல். மாணிக்கவாசகர் தாம் பெற்ற இன்ப அனுபவத்தைத் தேக்கி வைத்திருக்கும் 'ஞானத் தேக்கம் அது.

‘ கொடியேன் ஊன்றழை
குரம்பை தோலும் நாயுடல் அகத்தே
குரம்பை கொண்டின்தேன் பாய்ந்து நிரம்பிய
அற்புதமான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றின் உருகுவது
உள்ளங் கொண்டோர் உருச்செய்தா அங்கெனக்கு
அள்ளூருக்கை அமைந்தனன்.

என்பது அடிகளது அமுதப்பாடற் பகுதிகளில் ஒன்று. இதன் கண் அடிகள் தமக்கு இறையருளாற் கிடைத்த இன்பப் பேற்றை எடுத்துரைப்பதோடு தாம் பெற்ற அருள் உருவை எடுத்து விளக்கும் எழிலைக் காண்கின்றோம். உருகுகின்ற உள்ளம் போன்று, உடல் முற்றும் உருகுவதாய் - எலும்புத் துளை தோறும் அமுத தாரைகள் ஏற்றியதாய் - இன்பத்தேன் பாய்ச்சப் பெற்றதாய் அமைந்த தம் உடல் அமைப்பை இங்கு அடிகள் விளக்குகின்றனர். இவ்வாறே இறைவனைத் தேனுய்ப் பாலாய் அமுதமாய் அடிகள் நுகர்ந்தனுபவிக்கும் பாங்கை அடிகளின் பாடல்கள் பலவும் காட்டுகின்றன. இவற்றையெல்லாம் கருதுகின்ற வடலூரடிகள், மாணிக்கவாசகர் பெற்ற அருளனுபவம் தமக்குக் கிடைக்காதா என்று ஏங்குகின்றார். ‘நாட்டில் இனிக்கின்ற நல்லமுது போன்றவனே! மாணிக்கவாசகன் என்ற மாண்புறு பெயர் வாய்ந்தவனே! இன்பவடிவாய் வந்த ஏந்தலே! பெருந்தவப் பேறுடையவனே! குற்றமற்ற நீ திருவாய் மலர்ந்த பெருவேதமாகிய திருவாசகத்தின் இனிய அனுபவத்தை எளியேனுகிய யானும் அனுபவிக்க நீ அருள்வாயாக’ என்று வேண்டுகின்றார். இந்த வேண்டுகோள், உருக்கமான முறையீடு அமைந்த இப்பாமாலையின் முதற்பாடல் இது.

“ தேசத்தில் இனிக்கின்ற தெள்ளமுதே! மாணிக்க
வாசகனே! ஆனந்த வடிவான மாதவனே!
மாசகன்ற நீ திருவாய் மலர்ந்ததமிழ் மாமறையின்
ஆசகன்ற அநுபவம்நான் அநுபவிக்க அருளுதியே ”

### அருட்சார்பு

இறைவனை அடைதல் வேண்டுமென்ற பெருவிருப்பம் எளிதிற் கிட்டாத ஒன்று. புறக்கோலம் செறிந்த உலகிடை வாழும் மாந்தர் இரண்டாட்டம் உடைய வாழ்வினர் உலகச்சார்பு

பற்றுக நின்றும் அருட்சார்பு பற்றவேண்டும் என்னும் குறிப்பினர். திருவைந்தெழுத்திலும் உயிரின் இவ்வியல்பு குறிக்கப் பெற்றிருத்தலைச் சைவ சாத்திரங்கள் கூறும். நகரமகரங்கட்கும் சிகர வகரங்கட்கும் இடையில் யகரம் அமைந்திருத்தல் இதனையே விளக்கும் என்று கூறுவர். இத்தகு உலகிடையே இறையடி நீழல் வேண்டிப் பித்துற்ற மனத்தினராய் உலவுவோர் பலர். மணிவாசகரோ உருவொளியிற் கலந்து மறைந்த ஒப்பற்ற பெரும் புகழை உடையவர். இப்பெருஞ்சிறப்பை எடுத்தேத்தி மகிழ்கின்றது இரண்டாவது திருப்பாட்டு.

மூன்று உருவங்கள் :

மாணிக்கவாசகர் பெற்ற உருவங்கள் மூன்று என்றும், அவை (1) அன்புருவம் (2) அருளுருவம் (3) இன்புருவம் என்ற மூன்றும் என்றும், தமது புருவ நடுவின்கண் நெஞ்சை நிறுத்தி நீண்டகாலம் தவம் செய்வோரும் பெறாத இப்பெறும் பேற்றை மணிவாசகர் பெற்றனர் என்றும் வியந்து போற்றுவது மூன்றாவது திருப்பாட்டு. அவ்வரும் பொருட் கவிதையின் அழகிய வடிவம் இது

'' மன்புருவ நடுமுதலா மனம் புதைத்து நெடுங்காலம்
என்புருவாய்த் தவம்செய்வார் எல்லோரும் ஏமாக்க
அன்புருவம் பெற்றதன்பின் அருளுருவம் அடைந்துபின்னர்
இன்புருவம் ஆயினை நீ எழில் வாதவூரிறையே ''

இங்கு குறிக்கின்ற முறையை நோக்குமிடத்து முதற்கண் அன்புருவம் பெறத்தக்கதென்றும், அதன்பின்னே அருளுருவம் பெறத்தக்கதென்றும், இறுதியிற பெறுவது இன்புருவம் என்றும் அறியலாம். திருவாசகத்தே பல இடங்கள் இவ்வுருவங்களை மணிவாசகர் அடைந்தமையை இனிது விளக்குகின்றன. அன்பு நிலையின் கொடுமுடிகளையும், அருள் நிலையின் நுட்பவியல்களையும், இன்ப அநுபவத்தின் எழில்மிகு நிலைகளையும் விளக்கும் திருவாசகப் பாடல்களை இவ்வகையிற் பிரித்தெடுத்துத் தெளிய முற்பட்டால் அது இப் பரிணும விளக்கமாக அமையும் என்று கூறலாம்.

அண்டப்பகுதிச் சிறப்பு:

இனி, திருவண்டப்பகுதியின் சிறப்பை எடுத்துப் பேசுகின்றது நான்காவது திருப்பாட்டு.

"உருவண்டப் பெருமறையென் றுலகமெல்லாம் புகழ்கின்ற
திருவண்டப் பகுதியென்னும் திருவகவல் வாய்மலர்ந்த
குருவென்றப் பெருந்தவரும் கூறுகின்ற கோவே நீ
இருவென்ற தனியகவல் எண்ணமெனக் கியம்புதியே"

'சிவனது தூல சூக்குமத்தை வியப்பது' திருவண்டப்பகுதியின் உள்ளுறையென்பர்.

"கடைமுறை
என்னையும் இருப்ப தாக்கினன் என்னிற்
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராவமுதாக்கினன்
பிரமன் மாலறியாப் பெற்றி யோனே."

என்று முடிக்கின்ற இறுதி வரிகளில் வடலூரடிகள் உள்ளம் நிலைக்கின்றதுபோலும். 'இரு என்ற தனியகவல்' என்று இவ்வரிகளை யுள்ளிட்ட இத்திருவண்டப்பகுதியின் ஆழப் பொருளாக வேறு கருதி உணர்த்துவது அடிகளின் எண்ணம்போலும் என்று கருத இடமிருக்கின்றது. அச் சிறப்பினைத் தனக்கும் எடுத்தருள வேண்டும் என்று வேண்டக் காண்கின்றோம். நுண்பொருள் காண்டலிலும் மெய்ப்பொருள் காண்டலிலும் நம் சான்றோர்க்கிருந்த ஏக்கழுத்தம் இக்கால உலகிற்குப் பெரிதும் வேண்டத்தக்கதாகும். ஆழ்ந்து சிந்திக்காமல் எதையும் மேம்போக்காகப் பார்க்கும் மனநிலை மாறுதலும் ஆழவேண்டிய இடங்களில் ஆழ்ந்து பயன்கொள்ளலும் வேண்டத்தக்கவையாகும்.

## சேவடிக்கீழ் செம்மாப்பு :

ஐந்தாவது திருப்பாட்டில் மணிவாசகரிடத்து வடலூரடிகள் கொண்டுள்ள அன்பு வேறுநிலையில் வெளிப்படுகின்றது. ஆனந்தச் சிற்சபையில் ஞானமயமாய் ஆடுகின்ற பெருமானின் சேவடிக்கீழ் ஆடுகின்ற ஆரமுதாக உள்ளவர் வாதவூர் அடிகள் என்றும் தாம் வாடுகின்ற வாட்டமெல்லாம் வந்தொருகால் மாற்றும் திறம் அவர்க்கே உண்டு என்றும் கருதுகின்றார்.

"தேடுகின்ற ஆனந்தச் சிற்சபையின் சின்மயமா
ஆடுகின்ற சேவடிக்கீழ் ஆடுகின்ற ஆரமுதே
நாடுகின்ற வாதவூர் நாயகனே நாயடியேன்
வாடுகின்ற வாட்டமெல்லாம் வந்தொருகால் மாற்றுதியே"

## இன்ப உணர்வு :

திருவாசகத்தினை எண்ணுங்கால் வடலூரடிகட்கு விளையும் இன்ப உணர்வு அளவற்றது. அது காதற் கணவனொடு நிகழ்ந்த இன்ப உணர்வினை ஒரு கற்புடைய பெண் கருதுங்கால் ஏற்படும் இன்ப உணர்வினும் பெரிது என்று பேசுகின்றது ஆறாவது திருப்பாட்டு.

" காமமிகு காதலன்தன் கலவிதனைக் கருதுகின்ற
ஏமமிகு கற்புடையாள் இன்பினும் இன்பெய்துவதே "

அந்த இனிப்புக்கு ஒரு வடிவம் கூட்டுகின்றது ஏழாவதுபாட்டு. கருப்பஞ்சாற்றிலே தேன்கலந்து, பால்கலந்து கனிச்சுவை கலந்து, ஊன் கலந்து, உயிர் கலந்து, உவட்டாமல் இனிக்கின்றது 'நான்' என்பது கலந்து பாடுங்கால் திருவாசகம் என்று கூறுகின்ற அக்கவிதையின் சுவையூரும் வரிகள் இவை.

" நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்தென்
ஊன்கலந்து உயிர்கலந்து உவட்டாமலினிப்பதுவே."

## குருமோழி :

மாணிக்கவாசக! நின்வாசகத்தில் ஒரு மொழியே என்னையும் என்னை உடையானையும் ஒன்றுபடுத்துகின்ற பெருமை உடையது எனில், வேறு எனக்குக் குருமொழியும் வேண்டுமோ" என்று கூறும் எட்டாம் பாடல் சிவஞானபோதம் எட்டாம் நூற்பாப் போன்று குருவருள் விளக்கமாக அமைகின்றது. மாணிக்கவாசகரே இராமலிங்க அடிகட்கு ஞான ஆசிரியர், என்பதற்கு இப்பகுதி அகச்சான்று என்று கூறலாம்.

வருமொழிசெய் மாணிக்கவாசக நின்வாசகத்தில்
ஒருமொழியே என்னையும் என்னுடையனையும் ஒன்றுவித்துத்
தருமொழியாம் என்னில்இனிச் சாதகமேன் சஞ்சலமேன்
குருமொழியை விரும்பியயல் கூறுவதேன் கூறுதியே.


## உள்ளக்கசிவு :

தம் ஞான ஆசிரியராகிய மணிவாசகர் பொருட்டு இறைவன் குதிரைத் தலைவனாக வந்தும், வைகை வெள்ளம் அடைக்க மண்


தருமையாதீனம் குருபூஜை விழாவில் :



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள்
சென்னை உயர்மன்ற நீதிபதி,
கனம் திரு. N. கிருஷ்ணசாமி ரெட்டியார் B. A., B. L. அவர்கட்கும்,
தமிழ்நாடு இந்துசமய அறநிலைய ஆணையர்
உயர்திரு. ஆ. இராதாகிருஷ்ணன் M. A., B. L. அவர்கட்கும்
பொன்னுடை போர்த்தி ஆசியருளல்.



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் பட்டணப்பிரவேசத்துக்கு எழுந்தருளல்.



ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் காவிரித் திருமஞ்சனத்திற்கு எழுந்தருளல்.

சுமந்து நின்றும், மாறன் பிரம்படிப்புண் சுமந்தும் எய்திய இடர்களை நினைவு கூர்ந்து இன்புற்றுத் தம் உள்ளக்கசிவை ஒன்பதாம் பாட்டில் வெளிப்படுத்துகின்றார் அடிகள்.

"பெண்சுமந்த பாகப் பெருமான் ஒருமாமேல்
எண் சுமந்த சேவகன்போல் எய்தியம் வைகைநதி
மண் சுமந்து நின்றதும்ஓர் மாறன்பிரம்படியால்
புண்சுமந்து கொண்டதும் நின்பொருட்டன்றோ
புண்ணியனே"

ஞானநாட்டப்பேறு:

மணிவாசகரது திருவாசகம் அஃறிணை உயிர்களையும் பிணிக்கும் பேரருள் நுட்பம் உடையது. ஆதலின் தமக்கு ஞான நாட்டத்தை அவ்வருட்பாட்டு உண்டாக்குதல் வியப்பன்று என்று அடிகள் கூறும் பகுதி நிறைவுத் திருப்பாட்டாக மலர்கின்றது. கீழ்ப்பறவைச் சாதிகள் மெய்ஞ்ஞானநாட்டம் பெறுதல்மட்டும் அன்று. வேட்டையாடிப் பிற உயிர்களைக் கொன்றுண்ணும் கொடுமை உடையனவாகிய பொல்லா விலங்குகளும் ஞானநாட்டம் உறுகின்றன என்பதே பெருவியப்புக்குரியதாக உள்ளது.

"வாட்டமில்லா மாணிக்கவாசக நின்வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்ப்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞ்ஞான
நாட்டமுறும் என்னில் இங்கு நானடைதல் வியப்பன்றே"

ஈடுபாட்டின் எழில்:

இவ்வாறு வாதவூரடிகள் மாட்டும் அவரருளிய திருவாசகத்தின் மாட்டும் தமக்கிருந்த எல்லையற்ற ஈடுபாட்டிற்கு ஓர் அழகு வடிவம் கொடுத்துப் புனைந்த அன்புப் பாமாலையாக 'ஆளுடைய அடிகள் அருள்மாலை' விளங்குகின்றது.

# திருப்பனந்தாள் தலச் சிறப்பு

திருச்சிற்றம்பலம்

கண்பொலி நெற்றியினன் றிகழ் கையிலோர் வெண்மழுவான்
பெண்புணர் கூறுடையான் மிகு பீடுடை மால்விடையான்
விண்பொலி மாமதிசேர் தருசெஞ்சடை வேதியனூர்
தண்பொழில் சூழ்பனந்தாள் திருத் தாடகை யீச்சரமே. -சம்பந்தர்

திருச்சிற்றம்பலம்

சோழநாட்டில் காவிரியின் வடகரையில் உள்ள பாடல் பெற்ற சிவதலங்களில் சிறப்புடைய தலம் திருப்பனந்தாள். இது காவிரி கொள்ளிடம் என்னும் இருபெரு நதிகளுக்கிடையில் மண்ணியாற்றங்கரையில அமைந்து விளங்குகிறது. இத் தலத்தின் பெயருக்கேற்ப இங்குப் பனைமரமே தலவிருக்ஷமாக உள்ளது.

## தாலவனம் :

திருப்பனையூர், திருப்புறவார்பனங்காட்டூர், திருவன்பார்த் தான் பனங்காட்டூர் முதலிய தலங்களும் பனைமரத்தையே தல விருக்ஷமாக உடையன. திருவோத்தூர் ஆண்பனை பெண்பனை யாகிய தலமாதலின் அங்கும் தலவிருக்ஷமாக இருப்பது பனை மரமே. இங்ஙனம் பல இடங்களில் இறைவன் பனையின்கீழ் இருந்து காட்சியளிக்கின்ற காரணத்தால் அத்தலங்கள் தால வனம் என்று வழங்கப்பெறுகின்றன. இத்திருப்பனந்தாளும் தாலவனம் என்று வழங்கப்பெறுகின்றது

## தாடகையீச்சரம் :

தாடகை என்னும் ஒருத்தி மகப்பேறு வேண்டித் தவம் புரிய, அவள் முன் பிரமதேவன் தோன்றி, 'நீ தாலவனத்தில் சென்று சிவபெருமானை வழிபட்டு நின் விருப்பம் நிறைவேறப் பெறுவாயாக' எனச் சொல்லிச் சென்ற வண்ணம், அவள் இத் தலத்தை யடைந்து, இங்கு எழுந்தருளியிருக்கும் பெருமானை

நாள்தோறும் அன்புடன் வழிபட்டு வந்தாள். ஒருநாள் அவள் தான் கையில் எடுத்தமாலையை இறைவனுக்குச் சாத்தப்போகும் பொழுது ஆடை நெகிழ்ந்தது. அதனைத்தான் இருமுழங்கைகளாலும் இடுக்கிக்கொண்ட நிலையில் அவள் இடர்ப்படுவதைக் கண்ட பெருமான் தானே தன் திருமுடியைச் சாய்த்து அதனை ஏற்று அவளுக்குக் காட்சி கொடுத்து, அவள் வேண்டிக் கொண்டபடி அவளுக்கு மகப்பேறும், இத்தலத்திற்குத் தாடகையீச்சரம் என்னும் பெயரும் உண்டாகுமாறு வரம் கொடுத்து மறைந்தருளினன். அதுமுதலாக இதற்குத் 'தாடகையீச்சரம்' எனப்பெயர் வழங்குகின்றது.

## குங்குலியக்கலயர் தொண்டு :

தாடகையின் அன்பிற்காகத் தலைசாய்த்த இலிங்கப்பெருமானை நிமிர்த்தி வணங்க நினைத்த சோழ மன்னன் ஆட்களைக் கொண்டும், யானை குதிரைகளைக் கொண்டும் கயிற்றினால் இழுக்கச்செய்தும் இலிங்கம் நிமிரவில்லை. அதனால் சோழ மன்னன் வருந்தியிருந்தபொழுது, திருக்கடவூரில் குங்குலியப் பணி செய்திருந்த குங்குலியக்கலய நாயனார் இதையறிந்து இத்தலத்திற்கு வந்து, சிவலிங்க மூர்த்தியைச் சுற்றியுள்ள கயிற்றைத் தம் கழுத்தில் பூட்டி இழுத்தார். அதனால் பெருமான் நிமிர்ந்து நின்றதுகண்டு அரசன் முதல் அனைவரும் மகிழ்ந்து, நாயனாரது அன்பின் திறத்தை வியந்தனர்.

## அம்பிகை உபதேசம் பெற்றது :

இத்திருத்தலத்தில் அம்பிகை சிவபெருமான் அருள்மொழிப்படி எழுந்தருளிவந்து அருந்தவம் இயற்றி அப்பெருமானால் ஞானோபதேசம் செய்யப்பெற்றாள்.

## பிற வரலாறுகள் :

இந்திரனது சாபத்தால் காட்டானையாய்த் திரிந்த ஐராவதம் நாரதமுனிவர் சொற்படி இத்தலத்தையடைந்து தடாகம் அமைத்து அதில் நீராடி இறைவனை வழிபட்டுத் தனது முன்னையுருவத்தைப் பெற்றுத் தேவ லகம் சென்றது.

வாசுகியின் மகளாகிய சுமதி என்னும் நாக கன்னிகை. தனக்கு இறைவன் கனவில் தோன்றி அருள்செய்தபடி இத்தலத்திற்குப் பிலத்துவாரத்தின் வழியாக வந்து, அம்பிகை திருமுன் உள்ள கூபத்தின் வழியே வெளிப்போந்து இறைவனை

வழிபட்டு யாத்திரிகனுய் வந்த அரித்துவசன் என்பவனுல் மணக்கப்பெற்றுள். பின்பு இருவரும் வழிபட்டிருந்து முத்தியின்பம் பெற்றுர்கள். மற்றும் சங்குகன்னன் என்னும் அந்தணன் முதலாகப் பலர் இத்தலத்தில் இறைவனை வழிபட்டு நலம் பல பெற்றுர்கள்.

**தீர்த்தம்:**

நாககன்னிகை தீர்த்தம், ஐராவத தீர்த்தம், பிரம தீர்த்தம், விட்டுணு தீர்த்தம், சூரிய தீர்த்தம். சந்திர தீர்த்தம், தாடகை தீர்த்தம், ஆதிசேட தீர்த்தம், அரித்துவச தீர்த்தம், தருமசேன தீர்த்தம், கூப தீர்த்தம், மண்ணியாறு முதலிய பல தீர்த்தங்கள் ஆலயத்தின் உள்ளும் புறம்பும் உள்ளன. நாககன்னிகை தீர்த்தத்தில் மூழ்கி தாலவனப்பெருமானை வழிபடுவோர் மண வாழ்க்கை யெய்தப்பெறுவது இன்றும் அனுபவமாக நிகழ்வது.

**கும்பாபிஷேகம்:**

தருமையாதீனத்தின் பரிபாலனத்தில் உள்ள இருபத்தேழு திருக்கோயில்களுள் ஒன்றுக விளங்கும் இத்திருத்தலத்தில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் இராஜகோபுரம், கட்டக்கோபுரம், அம்பாள் கோபுரம், விநாயகர், சுவாமி, அம்பாள் சந்நிதி கர்ப்பக்கிரக விமானங்கள் முதலியன சுதை வேலைகள், சிற்ப வேலைகள் பல நிறைவேறி அஷ்டபந்தன மகாகும்பாபிடேகம் கீலக ஆண்டு ஆனித்திங்கள் 22-ஆம் நாள் (5—7—68) வெள்ளிக்கிழமையன்று நடைபெற இருப்பது அன்பர்கள் அறிந்து பயன்பெறுதற்குரியது.

---


## குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம். இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச்செய்யவும் ஆராய்ச்சி விளக்கத்துடன் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின்வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது. **ஆண்டுச் சந்தா ரூ. 3—00.**

**விலாசம் :—** நிர்வாக ஆசிரியர்,

உயர்திருவாளர். T. M. குமரகுருபரன்பிள்ளை B.A., B.L. அவர்கள்

குமரகுருபரன் ஆபிஸ். ஸ்ரீவைகுண்டம்.

# தமிழ்நாடு தெய்விகப் பேரவை

திருச்செந்தூரில் இவ்வாண்டு பேரவைக் கூட்டங்கள் மிகச் சிறப்பாக நடைபெற்றன. 31—5—68, 1—6—68 இரு நாட்களிலும் திருச்செந்தூர் தேவஸ்தானக் கட்டிடங்களில் இக் கூட்டங்கள் நடைபெற்றன. தருமை, திருவாவடுதுறை மதுரை, குன்றக்குடி. காஞ்சிபுரம், திருப்பனந்தாள், பேரூர் கௌமார மடம், ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களும் மடாதிபதிகளும் இக் கூட்டத்தில் எழுந்தருளியிருந்தார்கள். சென்னை இந்து சமய அறநிலைய ஆணையர், துணை ஆணையர்கள், ஆணையரவர்களின் தனித்துணைவர் முதலிய பல அதிகாரிகளும் இக்கூட்டங்களில் பங்குபற்றினார்கள். மூன்றாவது முறையாகத் தருமையாதீனம் ஸ்ரீல ஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானத்தைப் பேரவையின் தலைவராக ஏகமனதாகப் பேரவையினர் தேர்ந்தெடுத்தார்கள். பேரவை செயற்கூட்டங்களில் குறித்த பொருள்கள்பற்றி விரிவாகப் பேசி நல்ல பல முடிவுகள் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவற்றில் செங்கற்பட்டில் தீரா நோயுற்று அவதியுறும் இந்து மக்களுக்கு ஒரு கருணை இல்லம் அமைப்பதும், திருச்சிக்கருகில் ஒரு இலவச மருத்துவ இல்லம் அமைப்பதும், திருச்செந்தூர் ஆலயத்திற்கு மிக அண்மையில் கடல் பெருகி வந்து கடலரிப்பு ஏற்படக்கூடியதாக இருப்பதைத் தடுத்து நிறுத்த வதனாரம்பம் என்ற தீர்த்தப்பகுதியில் அணையிட்டு நிலப்பகுதியைப் பெரிதாக்கப் பேரவையிலிருந்து நிதிஉதவி அளிப்பதும் வடதிருமுல்லைவாயில் ஆலயத் திருப்பணிக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்டபடியே பேரவையிலிருந்து கொடுப்பதாகஉள்ள நிதியைத் தனியே எடுத்து மூதலீட்டில் போட்டுவைத்து வேண்டும்போதுகொடுத்து அத திருப்பணியைச் செய்விப்பது என்று தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.

திருச்செந்தூரில் ஆலய அறங்காவலர்கள் அங்கு எழுந்தருளியிருந்த மகாசந்நிதானங்களுக்கும் மடாதிபதிகளுக்கும் சிறந்த முறையில் வரவேற்பொன்று அளித்தார்கள். இத்தலைவர்கள் எல்லோரையும் முறைப்படி தேர்வீதிகளில் வலமாக அழைத்து வந்து ஆலய நுழை வாயிலில் பூரணகும்ப மரியாதைகளுடன் அழைத்துச்சென்று செந்திலாண்டவன தரிசனம் செய்துவைத்து ஆலய மரியாதைகள் பலவும் செய்து மகிழ்ந்தார்கள்.

பொதுக்கூட்டம் ஒன்றிற்கு ஏற்பாடு செய்து அதில் தேவஸ்தான அறங்காவலர்களாலும் மற்றும் உள்ளூர்ச்சங்கங்களாலும் சிறந்த முறையில் வரவேற்பு அளிக்கப்பட்டது. வரவேற்புக்களுக்குத் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள் பதில் தெரிவிக்கையில் பேரவையில் நமது தென்னாட்டுச் சமயத் தலைவர்கள் பலரும் பங்கேற்றுத் தொண்டாற்ற முன் வந்திருக்கின்றார்கள். மடாலயத்தில் உள்ளவர்கள் செய்யட்டும் என்று மக்கள் அவர்களை எதிர்நோக்கி சும்மா இருந்துவிடுதல் சிறப்பாகாது. மக்களும் இதில் பங்கேற்று எல்லாத் தொண்டுகளும் சிறப்படைய உதவிகள் பலவும் செய்தல் வேண்டும். அவரவரும் அவரவரால் இயன்ற அளவு ஒரு சிறு தொகையையாவது காணிக்கையாகச் செலுத்தித் தமக்கு இதில் உள்ள ஆர்வத்தை வெளிப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும். அப்பொழுதுதான் நமது சமயத்தவர்கள் எல்லோரும் ஒன்று திரண்டு நாம் ஏற்ற பெருமட்டணியில் முழுவெற்றியும் காண இயலும் என்று கூறி ஆசி வழங்கினார்கள். இதனை ஒட்டி திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடம் சுவாமிகளும், மதுரை ஆதீனம், குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களும் அறவுரைகள் வழங்கி வாழ்த்தினார்கள்.

1—6—68 அன்று மாலையில் திருநெல்வேலி ஜங்ஷன் ஹிந்துக்கல்லூரி திறந்த அரங்கில் பேரவையின் உறுப்பினரான தலைவர்களுக்குப் பெரும் வரவேற்பு அளிக்கப்பெற்றது. இதனை நெல்லைமாவட்டப் பேரவைக் குழுவினர் திட்டம் செய்திருந்தார்கள். இதில் அந்த மாவட்டத்தில் உள்ள பல சங்கங்களும் தனிப்பட்டவர்களும் கலந்து மிகுந்த உற்சாகத்தோடு வரவேற்புக்கள் அளித்தார்கள். பலலாயிரக்கணக்கான மக்கள் அங்குக் குழுமியிருந்து ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களும் மடாதிபதிகளும் அளித்த ஆசியுரையைக் கேட்டு மகிழ்ந்தார்கள். இதன் தொடக்கத்தில் தருமை ஆதீன மடாலயத்திலிருந்து மடத்துத் தலைவர்களை முறையாக அழைத்துச்சென்று சாலைக் குமாரர் திருக்கோயில் வழிபாடுகள் நிகழ்த்துவித்துப் பிறகு அரங்கத்திற்கு அழைத்துச் சென்றனர். இங்கும் கூட்டத்திலும் மக்கள் நன்னெறிநின்று வாழ்தல்வேண்டும் ஒற்றுமையாக இருத்தல் வேண்டும். பேரவையின் தொண்டுகளில் அவரவரும் தமதம் வாழ்க்கையின் குறிக்கோளாகக்கொண்டு அவரவரால் இயன்ற அளவில் பங்கேற்று நிதி உதவியும் உடல் உழைப்பும் நல்கிப் பெருமைப்படல்வேண்டும் என்று கூறி ஆசி வழங்கினார்கள்.

இந்த எல்லாக் கூட்டங்களும் செம்மையாக வெற்றிபெறத் தக்கதாக அமைத்து நடத்த அறநிலைய இலாகா அதிகாரிகள் பலரும் முயன்று வெற்றிகண்டனர்.

# செய்திகள்

## ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் 24-ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜை விழா கிலக௵ வைகாசி௴ 23௳ (5—6—68) புதன்கிழமை சிறப்பாக நடைபெற்றது. அன்று காலை - மாலை இருவேளைகளிலும் குருமூர்த்திகளின் ஆலயத்தில் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகளும் திருமுறைப் பாராயணமும் சாத்திரச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடாற்றி விழாமலராக முத்துக்குமாரசுவாமி அந்தாதி என்ற நூலை வெளியிட்டு வழங்கி அன்பர்களுக்குப் பிரசாதம வழங்கியருளினார்கள். அன்பர்கள் பலர் வந்து தரிசித்தும் கேட்டும் குருவருள் பெற்று உய்ந்தனர்.

காலை 9-மணி முதல் சாத்திரச் சொற்பொழிவுகள் தொடங்கி நடைபெற்றன. வித்துவான், ஸ்ரீமத் சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள் "திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும்" என்ற தலைப்பிலும், வித்துவான், ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் "சிவஞானபோதம்" என்ற தலைப்பிலும். வித்துவான், ஸ்ரீமத் சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் "சிவஞான சித்தியார்" என்ற பொருளிலும், வித்துவான், ஸ்ரீமத் மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள் "இருபாவிருபஃதும் உண்மை விளக்கமும்" என்ற பொருளிலும், வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன் எம். ஏ., "சிவப்பிரகாசமும், திருவருட்பயனும்" என்ற தலைம்பிலும். வித்துவான், திரு. சா. குருசாமி தேசிகர் "வினாவெண்பாவும் போற்றிப்பஃறொடையும்" என்ற தலைப்பிலும், வித்துவான், சிரோமணி, திரு. வி. சபேசன் "உண்மை நெறிவிளக்கமும் கொடிப்பாட்டும்" என்ற தலைப்பிலும், திரு. ஆர். வேலாயுத ஓதுவார் "நெஞ்சுவிடுதூது" என்ற தலைப்பிலும், வித்துவான், திரு. சி அருணைவடிவேல் முதலியார் "சங்கற்பநிராகரணம்" என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர். இரவு திருமதி. பழனி விஜயலக்ஷ்மி குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சியும் நடைபெற்றது. அன்பர்கள் கேட்டு மகிழ்ந்தனர்.

## ஞானபுரீசுவரர் மகோற்சவம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம் ஸ்ரீஞானபுரீசுவர சுவாமி திருக்கோயில் மகோற்சவம் 8—5—68 முதல் 17—5—68 முடிய உள்ள நாட்களில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. 8—5—68 அன்று கொடியேற்றமும், 14—5—68 திருக்கல்யாண மும் 16—5—68 அன்று திருத்தேர்ப்பெருவிழாவும், 17—5—68 தீர்த்தங் கொடுத்தருளலும் நிகழ்ந்தன. விழா நாட்களில் விசேஷ நாதஸ்வர இன்னிசை முதலிய நிகழ்ச்சிகளும் வாண வேடிக்கை முதலியனவும் நிகழ்ந்தன. இவ்விழாவையொட்டி ஆதீன மடாலய முகப்பிலுள்ள திருநெறிய தெய்வத்தமிழ் மன்றத்தில் திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடு நாள்தோறும் மாலை 6 மணி முதல் தொடங்கி நடைபெற்றது.

## குருபூஜை விழா

17—5—68 வெள்ளிக்கிழமை தருமைஆதீன ஸ்தாபகர் ஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் குருபூஜைவிழா சிறப்பாக நடைபெற்றது. அன்றுகாலை ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் மேலக் குருமூர்த்த தரிசனத்திற்கு எழுந்தருளி வழிபாடாற்றினர்கள். பின்னர் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீ ஆலவாய்ச் சொக்கலிங்கப்பெருமான் வழிபாட்டிற்கு எழுந்தருளி விசேஷ அபிஷேக ஆராதனைகள் செய்து வழிபாடாற்றினர்கள். அன்பர்கள் பலர் வந்து வழிபட்டு திருநீற்றுப் பிரசாதம் பெற்று உய்ந்தனர். ஸ்ரீ குருஞானசம்பந்தர் வரலாறும் அருள்நூல்களும் என்றநூல் வெளியிட்டு வழங்கப்பட்டது.

ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜைத் திருநாளாதலின் ஸ்ரீ ஞானபுரீசுவரருக்கு சிறப்பு வழிபாடு நிகழ்த்தப்பெற்றது. விசேஷ அபிஷே ஆராதனைகள் சிறப்பாக நடைபெற்றன. பால் அபிஷேகத்தை அன்பர்கள் கண்டு களிகூர்ந்து மெய்ம் மறந்து நின்றனர். திருமுறைப் பாராயணம் முதலியன அன்பர்களின் உள்ளத்தைப் பெருமானிடத்திலேயே நிலைக்கச் செய்தன. வழிபாட்டிற்குத் திருப்பனந்தாள் காசிமடம் இளவரசு வித்துவான் காசிவாசி ஸ்ரீமத். முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் எழுந்தருளியிருந்தார்கள். ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் வழிபாட்டின் நிறைவில் பிரசாதம் வழங்கியருளினர்கள்.

மாலையில் கனகாபிஷேகம் கொண்டருளிய ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் காவிரித் திருமஞ்சனத்திற்கு எழுந்தருளிக் குருமூர்த்த வழிபாடு செய்தருளி முறையே திருக் கோயில் வழிபாடுகளை நிறைவேற்றி ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமானை வழிபட்டு கொலு வீற்றிருந்து அருட்காட்சி வழங்கியருளினார்கள்.

## பட்டணப் பிரவேசத் திருநாள்

18—5—68 சனிக்கிழமை காலையில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் ஸ்ரீ சொக்கலிங்கப் பெருமான் வழிபாடு நிகழ்த்திய பின்னர் நண்பகலில் மாகேஸ்வரபூஜை செய்தருளினார்கள். அன்று இரவு ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமகாசந்நிதானம் அவர்கள் பட்டணப்பிரவேசமாக எழுந்தருளியும் கொலுவீற்றிருந்தும் அருட்காட்சி வழங்கியருளினார்கள். பட்டணப்பிரவேசத்தின் போது அன்பர்கள் ஆங்காங்கும் தங்கள் தங்கள் வீடுகளின் முன்னர் ஒப்பனைகள் பல செய்து பூர்ண கும்பங்கள் வைத்து வழிபட்டுப் பிரசாதம் பெற்று மகிழ்ந்தனர். வாணவேடிக்கைகள், முதலியனவும் நிகழ்ந்தன. மக்கள் திரளாக வந்து தரிசித்து மகிழ்ந்தனர்.

## அன்னம்பாலிப்பு

ஸ்ரீ செந்தமிழ்ச் சொக்கலிங்கப் பெருமான் திருவருளால் 17—5—68 வெள்ளிக்கிழமை ஸ்ரீ குருஞானசம்பந்தர் குருபூஜை விழாவை முன்னிட்டு சிதம்பரம், திருவாரூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி, மதுரை, ஸ்ரீவில்லிபுத்தூர், சிவசைலம், இராமேசுவரம் ஆகிய இடங்களில் அடியவர்கட்கும், ஏழைகட்கும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அருளால் அன்னம்பாலிப்பும் சமய விரிவுரைகளும் நிகழ்த்தப்பெற்றன.

## சித்தாந்தப் பாட வகுப்பு

தருமையாதீன ஸ்தாபகர் ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகளின் குருபூஜைவிழா நாட்களில் நாள் தோறும் காலை 10 மணிமுதல் ஸ்ரீலஸ்ரீ கயிலைக்குருமணி அவர்களின் திருமுன்பு சித்தாந்தப் பாட வகுப்பு நடைபெற்றது. தருமையாதீனப் புலவர் சித்தாந்தக் கலைமணி மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல்முதலியார் அவர்கள் "சிவப்பிரகாசம்" என்ற சாத்திர நூலுக்கு விரிவுரை நிகழ்த்தினார்கள். பலர் கேட்டுப் பயன் பெற்றனர்.

# இலவச சித்த வைத்தியசாலை

## டாக்டர். திரு. K. இராமகிருஷ்ணன்

( மலர் 27, இதழ் 5. பக்கம் 232 இன் தொடர்ச்சி )

## புற்று நோய்

### ரேடியோ தெரபி

எக்ஸ் கதிர்களும் ரேடியமும் புற்றுநோயைத் தோற்றுவிக்கின்றன. இந்தத் தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்குச் சில ஆண்டுகளுக்குப்பின் லுக்கேமியா என்னும் குருதிப் புற்றுநோயும், உரேனியம், ரேடியம், தோரியம் முதலியவைகளால் எலும்பில் புற்றுநோயும் உண்டாகின்றன. உதாரணமாக ஜப்பானில் வெடித்த அணுகுண்டிலிருந்து வெளிப்பட்ட ரேடியக் கதிர்களால் ரத்தப்புற்றுநோய் கண்டு பலர் பலவருடங்களுக்கு ஆராத்துயரம் அடைந்தனராம் ஆனால் தற்காலத்தில் அதே ரேடியத்தையும் எக்ஸ் கதிர்களையும் கொண்டே புற்றுநோய் உள்ள இடத்தைச் சுட்டுக் குணப்படுத்த முயல்கின்றனர். அதுதான் ரேடியோ தெரபி.

### மற்ற வகைகள்

உள் உறுப்புக்களில் அட்ரீனல் புறணி என்னும் நாளமில்லா சுரப்பி, எக்ஸ்ட்ரோஜன் என்ற பால் ஹார்மோனைச் சுரக்கின்றது. சிலசமயம் சிலருக்கு இந்த ஹார்மோன் அதிகமாகச் சுரக்கும். அப்போது பெண்களுக்கு மாமேரி சுரப்பியிலும் கர்ப்பப்பையிலும், ஆண்களுக்குப் பீஜங்களிலும் புற்றுநோய் காண்கின்றதாம்.

சிகரெட்டின் மேல் சுற்றிஉள்ள காகிதத்தில் ஆர்சனிக் போன்ற ரசாயனம் கலந்திருப்பதால்தான் நிச்சயமாகப் புற்றுநோய் உண்டாகின்றது என்றும் சொல்கின்றார்கள்.

முதன்முதலாக போரல் என்ற பேரறிஞர் வைரஸ் என்ற மிக நுண்ணிய கிருமிகள் நம் திசுக்களில்தங்கிப் புற்றுநோயைத் தோற்றுவிக்கின்றது என ஆராய்ந்து அறிந்தார். டாக்டர் கிரீன் என்பவர் மனிதனிடமிருந்து வைரஸ்களையைப் பிராணிகளின் உடலில் செலுத்திப் புற்று நோயை உண்டாக்கிக் காட்டியதிலிருந்து அப்படியும் வரலாமென நம்பப்படுகின்றது.

சமீபத்தில் அமெரிக்க ஒரிகன் மாகாண சர்வகலாசாலை வைத்தியத் துறையினர் ஆராய்ச்சிசெய்து "கேராடோஸ்" என்ற ஒருவகை வளர்ச்சி உள்ளங்கைகளில் முத்துப் போல் வெள்ளையாக அல்லது தசையின் நிறங்கொண்டதாகத் தழும்புகள் போன்ற சிறு கொப்புளங்கள் காணப்பட்டால் புற்று நோய் வரும் என்று பத்திரிகைகளில் வெளியிட்டனர்.

மிகவும் இறுக்கமாக ஆடையை அணிவதால் குறிப்பாகப் பெண்களுக்கு இடுப்பைச்சுற்றி ஒருவித அரிப்பு உண்டாகி சொரிபோன்ற கருப்புப் படை ஏற்படும். அதுவே அதிகம் புண்ணாகித் தோல் புற்று ஏற்படலாம் என்றும் நம்புகின்றனர்.

## அறிந்ததெல்லாம் 70, 80 ஆண்டுகளாகத்தான்

சோவியத் மருத்துவப் பேரறிஞர் நிக்கோலாய்புரோக்கின் என்பவர் கூறுவதாவது: புற்றுநோய் பற்றிய பிரச்னைகள் மிகவும் சிக்கலானவை. அவைகளை எவ்வளவு காலத்திற்குள் தீர்க்கமுடியும் என்று அவ்வளவு எளிதில் கூறிவிடமுடியாது. ஏனென்றால் நமக்குப் புற்றுநோயைப்பற்றித் தெரிந்தது அனைத்தும் கடந்த 70, 80 ஆண்டுகளாகத்தான். அதிலும் ஆராய்ச்சி 30, 40 ஆண்டுகளாகத்தான் நடைபெற்றுவருகிறது என்று கூறியுள்ளார். புற்றுநோய்க்கு வைரஸ்களே முக்கிய காரணம் என்கிறார் அவர். மேலும் நுரையீரல், உணவுக்குழல் இரைப்பை ஆகிய உறுப்புக்களில் தோன்றும் கட்டிகளில் கண்டு பிடிப்பதும் இன்னும் சிரமசாத்தியமாகவே இருக்கின்றது என்றும் கூறுகின்றார்.

## சித்த வைத்தியம்

புற்று நோய்க்குச் சித்தவைத்தியத்தில் பலமுறைகள் கூறப்பட்டிருப்பினும், அனுபவத்தில் நற்பலன் அளித்துள்ள ஒரு சில மருந்துகளைக் கூறுவோம். அவையாவன :- கந்தகத்தைலம், கந்தக மெழுகு, உயர்ந்தமுறையில் தயாரிக்கப்பட்ட ரசச் சுண்ணம், அண்ணரச்சுண்ணம், காளமேக நாராயணச் செந்தூரம், நாகரச செந்தூரம், தங்கரசமெழுகு, ரசகந்திதாமிர மெழுகு, துருசுசுண்ணம், திரிவங்கரச பஸ்பம் ஆகியவை.

நோயின் தன்மையையும் நோயுற்றவரின் வயதுக் கிரமத்தையும் ஆய்ந்து மேற்கண்ட மருந்துகளைத் தனித்தோ அல்லது மற்றமருந்துகளைக் கூட்டியோ கொடுத்தால் இப்பயங்கர வியாதியாகிய புற்றுநோயிலிருந்து நிச்சயம் குணமடையலாம்.

## சரபேந்திரர் முறை

தஞ்சைசரஸ்வதிமஹால் வெளியீடான சரபேந்திர வைத்திய முறைகளில் புற்றுநோய்களுக்கு, ரணங்கள் ஆறுவதற்குக் கூறியுள்ள முறைகள் என் அனுபவத்தில் நல்ல பலன் கொடுத்துள்ளன. அவையாவன :-

ஈரமான கொடிவேலிவேரைத் தண்ணீர்விட்டு ஒரு சந்தனக் கல்லில் கைபடாமல் இழைத்து அதனுடன் சமஎடை வெல்லச் சர்க்கரை சேர்த்து ஒரு குச்சியினுல் குழைத்துப் புண்களில்போட புண்கள் ஆறும்.

ஜாதிக்காயை (ஒரு இரும்புக்கம்பியில் சொருகி விளக்கெண்ணெ விளக்கில்) சுட்டு, நல்லெண்ணெயில் குழைத்து புற்றின்மேல் பத்தாகப்போட குணமுண்டாகும்.

எலிப்புழுக்கையை கோமூத்திரத்தினுல் அரைத்து புற்றுக்களின் மேலே தடவ அவை தளரும்.

அதிமதுரத்தைத் தேனிலிழைத்து மேலே பூசினுலும் குணமுண்டாகும்.

திப்பிலியைப் பருத்திக்காய் சாற்றில் அரைத்துப்போட்டாலும் புற்றுக்கள் தீரும்.

வசம்பு, சுக்கு, வெள்ளைப்பூண்டு இம் மூன்றையும் சமஎடை எடுத்து அதற்குச் சரிஎடை சித்தாமணக்கு வேர்ப்பட்டையையும் சேர்த்து கல்லுரலிலிட்டு நசுக்கித் தினந்தோறும் வாய்ப் புற்றின் மேல்வைத்துக் கட்டிவந்தாலும் ஆறிவிடும்.

நவீன விஞ்ஞானத்தால் இந்நாள்வரையில் வரையறுத்துக் கண்டுபிடிக்க முடியாமலிருக்கிற இந்தப் பயங்கரப் புற்றுநோய் பற்றிய முழு விபரங்களையும் அதைப் போக்கும் வழிகளையும் நம் முன்னேர்கள் தவவலிமையாலும், ஆராய்ச்சித்திறனுலும் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே கண்டறிந்து சொல்லியிருக்கிறுர்கள். நவீன விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் குறிப்பாக ஆங்கில மருத்துவர்கள் ஒன்றுசேர்ந்து சித்தவைத்தியத்தில் பொதிந்துள்ள பொக்கிஷங்களை ஆராய்ந்தார்களானுல், இந்த உயிர்குடிக்கும் புற்றுநோய்க்கு நிச்சயம் தீர்வு காணமுடியும்.

# எதிர்காலம் - திரு. K. முத்துஜோதிடர்

( கீலகவூ ஆனிமீ 1உ முதல் 32உ முடிய )

(14—6—68 முதல் 15—7—68 முடிய)

**1. மேஷம் - அசுவதி - பரணி - கார்த்திகை ¼**

மேஷராசி 9 பாதங்களும் மிச்ரமானபலனைத் தரும். ஆரம்பத்தில் எல்லாம் சுபமாகவே தோற்றம் உண்டாகும், சகல காரியங்களும் தடைப்பட்டுப் பின்பு பூர்த்தி அடையும். ராஜாங்கத்தால் நன்மையும், உயர்பதவிகளும் ஏற்படும். வியவகாரம் ஜெயிக்கும். தெய்வபலம் முன்னின்று காக்கும். வெள்ளி, சனி சுபமாகும்.

**2. ரிஷபம் - கார்த்திகை ¾, ரோஹிணி - மிருகசீர்ஷம் ½**

விருஷபராசி 9 பாதங்களும் பூர்ணமான சுபத்தையேதரும், குடும்பத்தில் மங்கள காரியங்களும், தூரதேச பிரயாணமும். ஸ்தாவரஜங்கம சொத்துக்கள் கிரயவிக்கிரயங்களும், புண்ணிய பலன்களும், நஷ்டமான பொருள் வரத்தும் உண்டாகும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

**3. மிதுனம் - மிருகசீர்ஷம் ½, திருவாதிரை - புனர்பூசம் ¾**

மிதுனராசி 9பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். வியாதியால் அடிக்கடி தொந்திரவு ஏற்படும். நினைத்தகாரியம் சுலபமாக நடக்காது. வீண் செலவுகளும் குடும்பக்கவலையும் அதிகமாகும். சுபசோபனதிகள் ஏற்படும். எப்பொழுதும், ஸஞ்சாரமாக இருந்துகொண்டு இருக்கும். மேலோர் பெரியோர்களால் நன்மை உண்டாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

**4. கடகம் - புனர்பூசம் ¼, பூசம் - ஆயில்யம்**

கடகராசி 9 பாதங்களும் பூர்ணமான சுப பலனைத்தரும் வெகுகாலமாக எதிர்பார்த்து நடக்காத காரியங்கள் எல்லாம்

சுலபமாக நடக்கும். வியவசாயம் ஓங்கும். தெய்வபலம் பிரகா சிக்கும். சுகஜீவன லாபம் ஏற்படும். மேலோர் பெரியோர்களின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 5. சிம்மம் - மகம் - பூரம் - உத்திரம் $\frac{1}{4}$

சிம்மராசி 9 பாதங்களும் முற்பாதி பூர்ணசுபம் இருக்காது. வீண் செலவுகளும் அலைச்சல்களும் ஏற்படும். பிற்பாதியில் சுப சந்தோஷங்களும், உத்தியோக உயர்வும், மேலோர் பெரியோர் களின் அன்பும், வியாபாரத்தில் விருத்தியும் ஏற்படும். சனி, ஞாயிறு சுபமாகும்.

## 6. கன்னி - உத்திரம் $\frac{3}{4}$, ஹஸ்தம், சித்திரை $\frac{1}{2}$

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும், தனதான்ய விருத்தியும், நூதனமான முறையில் சிலதொழிலில் லாபகரமும் உண்டுபண்ணும். உலகபிரசித்தியும் ராஜாங்க மைத்திரமும் அதிகமாகும். வைத்திய செலவும் அதிகமாகும். சதா சஞ்சாரமாகவே இருந்துகொண்டு இருக்கும். குடும்பத்தில் மங்கள காரியங்களால் விசேஷமான கௌரவம் உண்டாகும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

## 7. துலாம் - சித்திரை $\frac{1}{2}$, சுவாதி - விசாகம் $\frac{3}{4}$

துலாராசி 9 பாதங்களும் சுபமேயாகும். நூதனமான முறையில் விவசாயம் ஓங்கும். ஸ்தாவரஜங்கம சொத்துக்கள் சேரும். தொழில் ஏற்றம் ஏற்படும். உலக பிரசித்தியும் தர்மாதி காரமும் கிடைக்கும். தெய்வ பலம் முன்னின்று காக்கும். செவ்வாய், புதன் சுபமாகும்.

## 8. விருச்சிகம் - விசாகம் - $\frac{1}{4}$, அனுஷம் - கேட்டை

விருச்சிகராசி 9 பாதங்களும் விசேஷமான நன்மையை உண்டுபண்ணும், தொழில் ஏற்றம் ஏற்படச்செய்யும். கிரய விக்ரயங்களால் லாபம் உண்டாகும். பிரதிஷ்டாபலனும் தர்மபிரவிருத்தியும் அதிகமாகும். கீர்த்திபத்திரம் கிடைக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

9. தனுசு - மூலம் - பூராடம் - உத்திராடம் $\frac{1}{4}$

தனுர்ராசி 9 பாதங்களும் விசேஷமான பூர்ண சுபம் உண்டாகும். புத்திராதிகளாலும் உத்தியோக மூலமாகவும் குடும்பம் மேன்மை அடையும். சுப சோபனாதிகளும், கிரய விக்கிரயங்களும், ஜீவனலாபமும் ஏற்படும். வெள்ளி, சனி சுபமாகும்.

10 மகரம். உத்திராடம் $\frac{3}{4}$ - திருவோணம் - அவிட்டம் $\frac{1}{2}$

மகரராசி 9 பாதங்களும் சுபமேயாகும். உத்தியோகம் ஓங்கும். மேல்பதவி கிடைக்கும். விவகாரம் ஜெயிக்கும். ராஜாங்கத்தால் நன்மதிப்பு ஏற்படும். நூதனமான தொழில் மூறைகளால் லாபம் உண்டுபண்ணும். குடும்பம் ஓங்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

11. கும்பம்-அவிட்டம் $\frac{1}{2}$ - சதயம் - பூரட்டாதி $\frac{3}{4}$.

கும்பராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். சுப காரியங்கள் மூலம் அதிகமான விரயம் ஏற்படச்செய்யும், பெரியோர்கள்மூலம் நன்மைஉண்டாகும். வம்சம் ஓங்கும், அதிகமான வைத்தியச் செலவு ஏற்படும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

12. மீனம் பூரட்டாதி $\frac{1}{4}$ உத்திரட்டாதி - ரேவதி.

மீனராசி 9 பாதங்களும் மிச்ரமான பலனைத்தரும். தெய்வ பலத்தால் சகல அரிஷ்டங்களும் நிவர்த்தியாகும். சுபமான பலனைத்தரும். குடும்பம் ஓங்கும். உத்தியோகத்தில் உயர்வும் கீர்த்தி பத்திரமும் கிடைக்கும். உலகப்பிரசித்தியும் ஏற்படும். தெய்வம் முன்னின்று காக்கும். எல்லாம் சுபமாகும். புதன், வியாழன் சுபமாகும்.

குறிப்பு :- மேற்படி ஆனிமாதம் குரு, சனி, செவ்வாய், சுக்கிரன், ராகு, கேது இவர்களுக்கு ஒருவருக்கொருவர் ஷஷ்டாஷ்டக ராசிகளிலும் நாமநக்ஷத்திர ரீதியாகவும் தோஷம் உண்டாகி வக்ர அஸ்தமனங்களும் ஏற்படுவதால் முன் மாதங்களில் எழுதிவந்தபடி பல ஆஸ்திக ஸஜ்ஜன மகாஜனங்களும்

மேலோர் பெரியோர்களும் நவக்கிரஹங்களையும், சிவசக்தி விஷ்ணுவாதி தேவதைகளையும் யக்ஞயாகாதிகளாலும் லக்ஷம் கோடி அர்ச்சனைகளாலும், அன்னதான கோதான பூதானாதிகளாலும், தேவகோபத்தைத் தணியச்செய்து உலகமக்கள் பயம் இல்லாமல் தர்மராஜ்யத்தில் வாழ்ந்துகொண்டு இருக்கும்படியாக ஸ்ரீ சர்வேச்வரனைப் பிரார்த்திக்க ஸ்மஸ்தமங்களமும் உண்டாகும்.

## EXTRACT FROM THE VISITORS' BOOK

Dharmapuram Adhinam

Sri Amirthakateswaraswamy Devasthanam, Tirucadayur.

We have the good fortune of visiting the Adhinam Temples for the second time. Our impression about the upkeep and maintenance of the standard of performance of rites in the temple under the control of the Dharmapuram Peetam held at the time of our last visit are fully confirmed when we hear now that this temple gets the award for the best maintenance of temples in Madras State for the second time.

This recognition is fully justified and we pray that Ambika sametha Amirdhamirthyunjayaswamy will continue to shower his blessings on the troubled and harased humanity. We congratulate the superintendent and other members of the supervision staff for their excellent and vigilant work.

(Sd.) M. VenkataRatnam, I. A. S.

29—5—68. Collector Guntur, District.